

அடிவானத்துக்கு அப்பால்
3997
PRESENTED BY:
PAGANERI.
3997

BAGANENI.



# அடிவானத்துக்கு
# அப்பால்

மாடல் பிரஸ், ஜி, டி., சென்னை.

# அடிவானத்துக்கு அப்பால்

[ கமலா காந்த வர்மா ]


மொழிபெயர்ப்பாசிரியர்

அ. கி. ஜயராமன்



நவயுகப்பிரசுராலயம்

ஜார்ஜ் டவுன், சென்னை



பதிப்புரிமை]


; ;

[6 அணா

# முன்னுரை

'இதயத்தில் காதல் உண்டாகும் போது யாரையும் கேட்டு உண்டாவ தில்லை. அது வெள்ளத்தைப் போல் பெருகுகிறது; அலை போல் கொந்தளிக் கிறது...

'காதலின் சம்பந்தம் ஒருபுறம் ஆத் மாவுடன்; மற்றொருபுறம் சமூகத்துடன். எதுவரைக்கும், இதற்கு ஆத்ம சம்பந்தம் இருக்கிறதோ அதுவரைக்கும் தர்மம், பாவம் என்ற கேள்வி எழுவதில்லை ...... ஆனால் மற்றொன்று: இந்தக் கபட சமூ கத்திடம் அது கட்டுப்பட்டிருக்கிறது. அப்போது, தர்மம், பாவம் ஆகியவற்றின் கதையும் ஆரம்பமாகிறது.' இவை, இந்த நாடகத்தில் தோன்றும் அபராஜிதா என்ற ஒரு ராஜ குமாரியின் வார்த்தை கள்.

அண்ணன் மனைவியைத் தம்பி காத லிக்கிறான். அவளும் அவனையே தன் காதலனாகக் கருதுகிறாள். இதைத் தடை செய்யவா முடியும்? ஆனால் இந்தக் காதல் ஆத்ம தீபத்தின் ஒளியாக மட்டும் பரிணமிக்கிறது. பாவ புண்ணிய பேதங் கள் எழுகின்ற காரிய - உலகுக்கு அது பரவாமல், தம்பியின் லட்சிய வேக மும், அவனைக் காதலிக்கும் இன்னொருத் தியின் தியாகமும் காக்கின்றன. ஆகவே, எட்டிப் பிடிக்க முடியாமல் நின்று மனி தனை அழைத்துப் பரிகசிக்கும் உன்னத லட்சியங்களைத் தொடர்ந்து செல்லும் சிலருடைய கதை இது.

காதல் ஒரு தெய்விக உணர்ச்சிதான்; ஆனல் அதன் பெயரால் வாழ்க்கையைப் பேய்க் கூத்தாக்குகிறுன் சாதாரண மனிதன்; லட்சிய புருஷனே, உலகத்தின் அந்தக் கரையை நோக்கி, அடிவானத்துக்கு அப்பால் உள்ள எதையோ தேடிச் செல்லுகிறுன்; அமரத்துவம் பெறுகிறுன். இதைச் சொல்லுகிறது இந்த ஹிந்தி நாடகம். இதைத் தெளிந்த தமிழிலே தருகிறுர் ஸ்ரீ. ஐயராமன். மூலத்தின் கவித்துவத்தையும் வேகத்தையும் ஸ்ரீ. ஐயராமன் தமிழிலே தந்துவிட்டார் என்பது என் நினைவு. ஆனல் எந்த மொழிபெயர்ப்பும் 'அடிவானத்துக்கு அப்பால்' உள்ள எட்டாத நட்சத்திரத்தை எட்டிப் பிடிக்க முயல்வதே. என்றுலும் அந்த முயற்சியில் ஈடுபடுவதில்தானே பெருமை; அதன் தன்மையை உணர்ந்து உங்களைப் போல் அதைப் பாராட்ட முன்வருவதுதானே தமிழ்க் காதல்?

ம. தி. தா.
ஹிந்து கலாசாலை
திருநெல்வேலி
29-4-41

அ. சீனிவாச ராகவன்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முதல் காட்சி | பக்கம் 9 |
| இரண்டாவது காட்சி | 19 |
| மூன்ருவது காட்சி | 25 |
| நான்காவது காட்சி | 30 |
| ஐந்தாவது காட்சி | 39 |
| ஆருவது காட்சி | 45 |
| ஏழாவது காட்சி | 47 |
| எட்டாவது காட்சி | 54 |
| ஒன்பதாவது காட்சி | 60 |

## பாத்திரங்கள்

**பாரிஜாதன்** — *நந்தன தேசத்து அரசன்*

**மந்தார்** — *பாரிஜாதனின் சகோதரன்*

**தேவதாரு** — *மந்தாரின் நண்பன்*

**விநாயக்** — *புஷ்பா தேசத்தின் கலகத் தலைவன்*

**லவங்கலதா** — *விநாயகனின் பேத்தி*

**அபராஜிதா** — *மந்தாரின் சிநேகிதை; ஒரு ராஜ குமாரி*

**மாதவி** — *லவங்கலதாவின் தோழி*

# அடிவானத்துக்கு அப்பால்

## முதல் காட்சி

*[ ஒரு தழைத்த மரத்தடியில் உள்ள பாறையின் ஒரு பாகத்தில் மந்தார் ஆகாயத்தைப் பார்த்தவண்ணம் படுத்திருக்கிறான். ராஜகுமாரி அபராஜிதா கொடிகளிலிருந்து புஷ்பம் பறித்துக்கொண்டிருக்கிறாள். ]*

**அபராஜிதா** — ராஜகுமாரா ! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய் ?

**மந்தார்** — உம்.

**அபரா** — என்ன யோசனை ? சொல்லேன்.

**மந்தார்** — நான்கூட அதைத்தான் அறியவேண்டும். நான் எதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேனென்று எனக்கே புரியவில்லை. பிரயத்தனம் செய்கிறேன்.

**அபரா** —இதை அறியப் பிரயத்தனம் செய்ய வேண்டுமா ?

**மந்தார்** — நான் என்ன யோசித்துக்கொண்டிருக்கிறேனென்று என்னுல் அறிய முடியவில்லை. எல்லோருக்கும் யோசிப்பது ஒரு வேலை. எனக்கு அது வாழ்க்கையின் ஜீவன்.

**அபரா** — சும்மா யோசிப்பதால் வாழ்க்கையில் ஒன்றும் நடைபெருது; இதையாவது நீ ஒப்புக்கொள்.

**மந்தார்** — இது என் மனத்தின் இயல்பு. இதனுல் என்னுடைய வாழ்க்கையில் எந்த வேலையும் தடைப்படுவதில்லை. நான் யுத்தம் செய்கிறேன்; பாடுகிறேன்; கனவு காண்கிறேன். அப்பொழுதெல்லாம் ஏதோ கொஞ்சம் யோசித்துக் கொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. என்னைப் பொறுத்த மட்டில் யோசிப்பதும் மூச்சு விடுவதும் ஒன்றுதான்.

**அபரா** — இது ஒரு புதுமையா? உம். உன்னுடைய எந்த வேலையும் இதனுல் பாதிக்கப்படுவதில்லை. ஒருகால்...... ஒருகால், அதில் என்னுடைய பேச்சு ஒன்றுசேர்ந்து கேட்குமா? கேட்காது அல்லவா?

**மந்தார்** — நான் உன்னுடைய எந்த வார்த்தையைக் கேட்கவில்லை?

**அபரா** — நீ கேட்டிருந்தால் இதைக் கேட்டிருக்கமாட்டாய். மந்தார், உன்னை ஒரு விஷயம் கேட்கட்டுமா?

**மந்தார்** — கேள்.

**அபரா** — வேண்டாம். போகட்டும், விட்டுவிடு. நான் கேட்கவில்லை!

**மந்தார்** — ஏன் கேட்கமாட்டாய்?

**அபரா** — யார் தம் மனத்தின் விஷயத்தையே தெரிந்துகொள்ளவில்லையோ அவர்கள் மற்றவர்கள் மனத்திலுள்ள விஷயத்தை எப்படி அறிந்துகொள்ள முடியும் ?

**மந்தார்** — ஆனாலுங் கூட....

**அபரா** — இல்லை. விட்டுவிடு அதை. ... நீர்வீழ்ச்சி பார்க்க எப்பொழுது போகப் போகிறாய் ?

**மந்தார்** — நீர்வீழ்ச்சி பார்க்கவா ? இல்லை, நான் போக முடியாது.

**அபரா** — ஏனோ ?

**மந்தார்** — நாளைக்கு என் தேசத்திற்குப் போகிறேன்.

**அபரா** — நாளைக்கா? நீ என்னிடம் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே ?

**மந்தார்** — உன் தந்தையிடம் சொல்லிவிட்டேன்.

**அபரா** —ஆனால் என்னிடம் ஏன் சொல்லவில்லை ?

**மந்தார்** — உன்னிடங்கூட......

**அபரா** — ஆனால் நாளைக்கு உன் தேசத்திற்குச் செல்லப் போகிறாய். அது எப்படி முடியும் ?

**மந்தார்** — சென்றே தீரவேண்டும். அண்ணா அழைத்திருக்கிறார்.

**அபரா** — நான் விடமாட்டேன் ; என்ன அப்படிப் பட்ட வேலை ?

**மந்தார்** — புஷ்பாவின் பிரஜைகள் கலகம் செய்கிறார்களாம். அதை அடக்குவதற்கு அண்ணா பெரிய

சேனையுடன் விசாகா நதிக் கரைக்கு வந்திருக்கிறார். நான் அவரை அங்கே சந்திப்பேன். பிறகு எங்கே உத்தரவோ அங்கே செல்வேன்.

**அபரா** — இவ்வளவு விஷயம் நடந்திருக்கிறது; நீ என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லையே?

**மந்தார்** —நீ கேட்டால் துக்கமடைவாய்; அதனால் தான்.

**அபரா** — துக்கமா? துக்கம் ஏன்? நீ உன் தேசத் திற்குச் செல்வதில் துக்கப்படக்கூடிய விஷயம் என்ன இருக்கிறது?

**மந்தார்** — நீ ஒரு பெண். யுத்த விஷயங்களைக் கேட்டால் பெண்கள் பயப்படுவது சகஜம். அதனால் தான் சொல்லவில்லை. ஏன்? என்னுடைய அனு மானம் தப்பென்று படுகிறதா?

**அபரா** — மந்தார், நீ உண்மையாய் போகத்தான் போகிறாயா?

**மந்தார்** — அப்படித்தான் தெரிகிறது.

**அபரா** — மறுபடி எப்பொழுது திரும்பி வருவாய்?

**மந்தார்** — அபராஜிதா! நான் யுத்தத்திற்குச் செல் கிறேனென்பதை நீ மறந்துவிட்டாயா? யுத் தத்திற்குச் செல்பவர்கள் எப்பொழுது திரும்பி வரு வார்கள் என்பதைச் சொல்ல முடியாது.

**அபரா** — அடி அம்மா! அப்படியுமா? ஆனால் நான் உன்னைப் போகவே விடமாட்டேன்.

**மந்தார்** — உங்கள் ராஜ்யத்தில் கலகம் ஏற்பட் டால் ஆடவர்கள் வளைகள் அணிந்து வீட்டிற்குள் தான் உட்கார்ந்திருப்பார்களோ?

அபரா — மந்தார்! எங்கள் தேசத்தின் வீரத்தைப் பழிக்காதே. எங்கள் ஆடவர் ஸ்திரீகள் எல்லோரும் உயிரைப் பொருட்படுத்த மாட்டார்கள். தந்தை யுடன் நான் யுத்தரங்கத்தில் மூன்று தடவை வாளேந்தி நின்றேன். உனக்குத் தெரியாதா ?

மந்தார் — தெரியும். தெரிந்துதான் இதைக் கேட் கிறேன். உங்கள்......

அபரா — மந்தார், என்னுடன் தர்க்கம் செய் யாதே. என்னைக் கேலிசெய்ய வேண்டாம்.

மந்தார்—இது என்ன, அபராஜிதா? அழுகிறுயே! அடாடா !

அபரா — நீ போகப் போகிருய் ; உண்மையாய் போகத்தான் போகிருயா ?

மந்தார் — அபராஜிதா! இதற்கு நான் என்ன பதில் சொல்வேன் ?

அபரா — எனக்கு நம்பிக்கை இல்லை. மயக்கம் தான் உண்டாகிறது. என்ன, நீ உண்மையாய்ப் போகத்தான் போகிருயா ?

மந்தார் —ஆமாம். அபராஜிதா, உண்மையாய்ப் போகப் போகிறேன்.

அபரா — இவ்வளவு சீக்கிரம் ......... அப்புறம்? எப்பொழுதும் இல்லை........... இல்லை................. மந்தார்! நீ பொய் சொல்லுகிருய். என்னைக் கேலி செய்கிருய். என்னை அழ வைப்பதற்காக இம்மாதிரி பேசுகிருய்.

மந்தார் — அபராஜிதா, என்னை அவ்வளவு கொடி யவன் என்று நினைக்கிருய் ?

அபரா — மந்தார் !

மந்தார் — அபராஜிதா !

[ அபராஜிதா தயங்கி நிற்கிருள் ]

மந்தார் — சொல் !

அபரா —.........................................

மந்தார் — அபராஜிதா, ஏன் சும்மா இருக்கிருய் ? என்ன சொல்லுகிருய் ? சொல்லு ! நான் யுத்தத்திற்குச் செல்கிறேனென்ருல் அதற்கு அர்த்தம் இறந்துவிடுவேன் என்பதல்ல. ஆனுல் யுத்தம் என்னவோ யுத்தந்தான் ! இந்த ஒரு வார்த்தையைக் கேட்பாயா, அபராஜிதா ?

அபரா — சொல்லேன் !

மந்தார் — பல தடவைகள் சொல்லவேண்டும் சொல்லவேண்டும் என்று நினைத்திருக்கிறேன். ஆனுல் சொல்ல முடியவில்லை. வார்த்தைகள் கிடைப்பதில்லை. கிடைக்கும் வார்த்தைகளும் உதடுவரை வந்து திரும்பி விடுகின்றன. அபராஜிதா, நான்.................நான் உனக்குத் தகுந்தவனல்ல. நான் அறிவேன். பெண்ணுருவில் நீ ஒரு தேவி. உஷையைவிடச் சுந்தரமானவள். பனித் துளியைவிட நிர்மலமானவள். வஸந்தத்தைவிட வசீகர சக்தி பெற்றவள். உன்னுடைய அன்பைப் பெறுவது கடல் சூழ்ந்த இந்தப் பூமண்டலத்தைப் பெறுவதைவிட அதிகம். ஆனுல் அபராஜிதா, உண்மையாய்ச் சொல்லுகிறேன் : நான் உனக்குத் தகுதியுடையவனல்ல.

அபரா — இதெல்லாம் எதற்காகச் சொல்லிக் கொண்டிருக்கிருய் ?

**மந்தார்** — *இதற்காகத்தான் — இதற்காகத்தான் : நீ என்னை மறந்துவிடு !*

**அபரா** — *இதனால் நீ என்ன லாபமடைவாய் ?*

**மந்தார்** — *நீ என்னை மறந்துவிட்டாய் என்பதை அறிந்தால் என் ஹிருதயத்தின் பாரம் கொஞ்சம் குறையும். காரணம் இதுதான்...*

**அபரா** — *ஏன் தடைப்படுகிறது ?*

**மந்தார்** — *நீ கேட்க விரும்புகிறாயா ?*

**அபரா** — *சொல்லிவிடு !*

**மந்தார்** — *இதற்குக் காரணம் .............. இதற்குக் காரணம் நானே சரியாக அறியவில்லை; ஆனால் ...*

**அபரா** — *இதுதான் நீ...*

**மந்தார்** — *இரு, என்னைப் பேச விடு. நான் நன்றாக யோசித்துக் கடைசியில் இதை நிர்ணயித்தேன். நான் உன்னிடமிருந்து தூரத்திலேயே இருக்கவேண்டும். இதற்குக் காரணம், இதுதான் : அபராஜிதா ! நான் உனக்காக ஏற்பட்டவன் அல்ல. யாருக்காக ஏற்பட்டவன் என்பதை நான் இன்றுவரை அறிய முடியவில்லை. ஆனால் யாருக்காக இருக்கிறேனோ அவள் நீயல்ல. இவ்வளவுதான் அறிய முடிகிறது. என்னுடைய இந்த முரட்டுத்தனத்திற்காக என்னை மன்னித்துவிடு. நீ கடவுளின் இணையற்ற சிருஷ்டி. நீ ஒரு நிதி. பரிசுத்தமானவள். இம்மூவுலகும் உனக்கு உவமையாகாது. ஆனால், அபராஜிதா......*

**அபரா** — *மந்தார் ! நீ எதைச் சொல்ல விரும்புகிறாயோ, அதை நீ சொல்லாமலே நான் அறிந்துகொண்டேன். நீ என்னைக் காதலிக்கவில்லை. அவ்வளவுதான்.*

இந்த உண்மையைப் பெரிய வார்த்தைகளைப் போட்டு ஏன் மறைக்க முயல்கிறாய்?

**மந்தார்** — எதை நீ உண்மை யென்று எண்ணியிருக்கிறாயோ அதைவிட அபத்தமானது வேறொன்று இருக்க முடியாது. இதைத் தெரியப்படுத்தவே அந்தப் பெரிய வார்த்தைகளின் மூலம் என் ஹிருதயத்தை உனக்கு வெளியிட முயல்கிறேன். ஆனாலும் நான் எதைச் சொல்ல விரும்புகிறேனோ அதைச் சொல்ல முடியவில்லை. என் உள்ளக் கிளர்ச்சி வெறும் சொற்களில் அடங்கவில்லை. நான் எதை உனக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்? உண்மை எது? ஒருகால் இவற்றையெல்லாம் ஒரு தினம் எதிர்பாராத ஒரு சம்பவத்தால் நீ அறிவாய். ஆனால் அதற்கு முன்பு, நீ என்னை மறந்துவிடவேண்டு மென்று நான் விரும்புகிறேன்.

**அபரா** — மந்தார்! நீ கடவுளை வாழ்த்து. உன்னை ஸ்திரீயாகப் படைக்காமல், புருஷனாகப்படைத்தாரே! என் ஹிருதயமும், புருஷ ஹிருதயமானால் ...ஆனால்... ஆனால், குமார், ஒரு வார்த்தை! பதிலளிப்பாயா?

**மந்தார்** — கேள்.

**அபரா** —நீ இதற்கு விடையளிப்பதில் சங்கோசப் பட்டால் நான் உன்னைத் தடைசெய்ய மாட்டேன்.

**மந்தார்** — இல்லை, இல்லை. கேள். கட்டாயம் பதில் சொல்லுகிறேன்.

**அபரா** — நீ எப்பொழுதாவது யாரையாவது காதலித்திருக்கிறாயா?

**மந்தார்** —அபராஜிதா! சிறுவனாக இருக்கும்போது நான் ஒரு மான் குட்டியை வளர்த்துவந்தேன்.

அதற்கு நான் என் கையாலேயே பாலூட்டி என் அருகிலேயே படுக்கவைத்துக் கொள்வேன். இது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அது இறந்த போது, நான் மிகவும் அழுதேன்...பிறகு....

**அபரா** — குமார்! நீ பரிகாசம் செய்கிருயா?

**மந்தார்** — அபராஜிதா! காதலை நீ எந்த விதமாக அர்த்தம் செய்கிருயோ, அந்த விதமாக நான் இன்று வரை அர்த்தம் செய்யவில்லை. முயற்சி செய்துங் கூடக் காதலை நான் உணர முடியவில்லை.

**அபரா** — சரிதான். இதுதான் நீ 'என்னை மறந்து விடு' என்று சொல்லக் காரணம். நீ அறிந்துகொண் டால்......மந்தார்! உன்னுடைய இச்சை இதுவாக இருந்தால், நான் இன்றிருந்து உன்னை மறக்க முயல் வேனென்று பிரதிக்ஞை செய்கிறேன். ஆனால் நீயும் ஒரு பிரதிக்ஞை செய்யவேண்டும்.

**மந்தார்** —என்ன பிரதிக்ஞை?

**அபரா** — என்றைத் தினம் நீ ஒருத்தியைக் காத லிக்கிருயோ, அன்றைத் தினம் என்னை அழைக்க வேண்டும். நான் எங்கிருந்தாலும் சரிதான், வந்து உன் காதலியைப் பார்ப்பேன் ...... பிறகு...... பிறகு ...... என் கையால் அவளுக்குச் சிங்காரம் செய்வேன். நானும் அவளிடம் அன்பு கொள்வேன். பிரதிக்ஞை செய்வாயா? சொல்லு!

**மந்தார்** — அந்த மாதிரி ஒரு தினம் வருமென்ற நம்பிக்கை இல்லை.

**அபரா**—பின்னே என்ன? பிரதிக்ஞை செய்துவிடு!

**மந்தார்** — அபராஜிதா, பிரதிக்ஞை செய்கிறேன். என்று நான் காதல் - உலகில் பிரவேசிக்கிறேனே, அன்று உனக்குத் தெரிவிக்கிறேன். ஆனால் அந்தத் தினம் ஒன்று வருமென்ற நம்பிக்கையே இல்லை.

**அபரா** — எதனால் உன்னுடைய மனத்திற்குச் சாந்தி உண்டாகிறதோ அந்தத் தினத்தை நான் எதிர் பார்த்துக் கொண்டிருப்பேன். உன்னை மறக்கவும் முயற்சி செய்துகொண்டு வருவேன். மந்தார்! நீ இன்னும் என்ன விரும்புகிறாய்? சொல்லு!

**மந்தார்** — என் செயலுக்கு நானே வெட்கமடைகிறேன். அபராஜிதா, நீ என்னை உன் மனப்பூர்வமாக மன்னித்துவிட வேண்டுகிறேன்.

**அபரா** — மன்னித்துவிடுகிறேன், மந்தார்! ஆனால் இப்பொழுதல்ல. என்று உன் காதலிக்குச் சிங்காரம் செய்து, அவளை உன் பக்கத்தில் உட்கார வைத்து, உங்கள் இருவரையும் என் கண் குளிரக் காண்பேனோ அன்றைத் தினந்தான் என் மனப்பூர்வமாக உன்னை மன்னிப்பேன். பிறகு உன் காதல் - உலகிலிருந்தே எப்பொழுதும் மறைந்துவிடுவேன். உன்னுடைய கனவிலும்கூட அபராஜிதாவின் நிழல் படாது. மறதி என்னும் இருண்ட குகையில் மூழ்கி மறைந்துவிடுவேன். மந்தார்! உன் மனச் சாந்தியே என் மனச் சாந்தியும். மந்தார்! நீ இதுவரை என் பக்ஷிச்சாலையைப் பார்க்கவில்லையே?

**மந்தார்** — அபராஜிதா!

**அபரா** — மந்தார், வா!

[ இருவரும் செல்கின்றனர் ]

## இரண்டாவது காட்சி

[ *விசாகா நதிக்கரை. ஓர் அசோக விருக்ஷத்தின் கீழ் லவங்கலதா புருஷவேஷம் புனைந்துகொண்டு சித்திரம் எழுதுவதில் லயித்திருக்கிறாள். மாதவி வருகிறாள்.* ]

**மாதவி** — *சித்திரமா? நல்லது! இத்தனை ஆசையாய் யாருடைய சித்திரத்தை எழுதுகிறாய் அம்மா?*

**லவங்க** — *நீ தெரிந்துகொள்ள வேண்டுமோ?*

**மாதவி** — *ஆமாம்!*

**லவங்க** — *என் ஸ்வப்பன தேவதை; கற்பனை உலகத்து ராஜபுத்திரன். அஸ்தி, ரத்தம், மாமிசமுள்ள மனிதனுடையதல்ல; கலையின் வர-புத்திரனுடையது. மாதவி, நீ செல். நான் உன்னிடம் சொன்னதைத் தாத்தாவிடம் சொல்லு. எனக்கு அதிக வேலை இருக்கிறது.*

[ *சித்திரம் எழுத ஆரம்பிக்கிறாள்* ]

**மாதவி** — *சரிதான். ஆனால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.*

**லவங்க** —*நீ கேட்டு அறிந்து என்ன செய்யப் போகிறாய்?*

**மாதவி** —(*சித்திரத்தின் அருகில் சென்று பார்த்து*) *லவங்கா, நான் ஒன்று கேட்கட்டுமா?*

**லவங்க** —*பேஷாய்க் கேள்.*

**மாதவி** — *உன்னுடைய ஸ்வப்பன தேவதை, கற்பனை உலகத்தின் ராஜபுத்திரன் ... பிறகு என்ன*

சொன்னாய்? இருந்தாலும் அவனைவிட இந்தப் புருஷ வேஷத்தில் நீ நூறு பங்கு அழகாக இருக்கிறாய். உண்மையாய்ச் சொல்கிறேன். நீ உண்மையிலேயே புருஷனாக இருந்தால்?

**லவங்க** — என்ன ஆகியிருக்கும்?

**மாதவி** — (*லவங்கலதாவின் சிகையை மறைத்து அவளுக்கு முடி சூட்டுகிறாள்*) லவங்கா! நீ புருஷனாக இருந்தால் எத்தனை ஸ்திரீகள் உன் காதலில் சிக்கியிருப்பார்கள்! எத்தனை பேர் பித்தர்களாகி யிருப்பார்கள்! ஆனால் நான் உன்னை ஒரு நிமிஷங்கூடக் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டேன்.

**லவங்க** — அப்படியானால் கடவுளை நான் வாழ்த்துகிறேன். நான் ஸ்திரீயாகாமல் புருஷனாக இருந்தால் என்மேல் எத்தனை ஹத்திகள் சுமந்திருக்கும்.

*[ மாதவி செல்கிறாள். லவங்கலதா சித்திரத்தை ஒரு முறை கவனமாய்ப் பார்த்துச் சிரிக்கிறாள். பிறகு வர்ணம் தீட்டுகிறாள். இதற்குள் ஒரு மான் பதைத்துக்கொண்டே ஓடிவந்து அவள் எதிரில் குதிக்கிறது. லவங்கலதா திடுக்கிட்டு நாற்புறமும் பார்க்கிறாள். பிறகு சட்டென்று பக்கத்தில் கிடந்த வில்லை எடுத்து அதன் மேல் அம்பெய்கிறாள். நதிக்கரையின் ஓரமாக ஒரு பெரிய வராகம் ஓடிக்கொண்டிருக்கிறது. லவங்கலதா குறிவைத்து அம்பெய்கிறாள். அம்புபட்டு வராகம் கூச்சலிட்டுக் குதித்து மடிந்துவிடுகிறது. இதற்குள் ஓர் அம்பு அவளுடைய காதோரமாக வந்து சித்திரத்தைத் துளைத்துப் புகுந்து செல்கிறது. லவங்கலதா திடுக்கிடுகிறாள். அவள் மறு கணை எடுக்கிறாள். இதற்குள் குதிரையின் மேல் ராஜா பாரிஜாதன் பிரவேசிக்கிறான். ராஜா குதிரையிலிருந்து இறங்கி வராகத்தைப் பார்க்கிறான். லவங்கலதா, வில்லையும்*

*பாணங்களையும் வைத்துவிடுகிருள். பிறகு கோலை எடுத்து வர்ணம் சேர்க்கிருள். அவள் தலை நிமிர்ந்து பார்க்கும் பொழுது ராஜா வேர்வை ஒழுக எதிரே நிற்கிருன்.]*

**ராஜா** — *நீ யார்?*

**லவங்க** — *(ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்துப் பதில் சொல்லாமல் இருக்கிருள்.)*

**ராஜா** — *இந்த வராகத்தின் மேல் அம்பெய்ய உனக்கு என்ன அதிகாரம்?*

**லவங்க** — *வராகம் யாராவது விலை கொடுத்து வாங்கியதா? யார் கொல்கிருர்களோ அவர்களுடையதுதானே!*

**ராஜா** — *என் வராகத்தின் மேல் நீ ஏன் அம்பெய்தாய்?*

**லவங்க** — *இதற்கு அதோ மரத்தில் பாய்ந்திருக்கும் உன்னுடைய அம்பு பதிலளிக்கும். அதைப் பார்!*

**ராஜா** — *நீ தவறு செய்தாய்; அதோடு அவமானமும் பண்ணுகிருயா?*

**லவங்க** — *மான அவமானத்தில் உள்ள அவ்வளவு கவனம் உனக்கு லட்சியத்தின் மேல் இருந்தால் இவ்வளவு சச்சரவுக்கு இடமே இராதே!*

**ராஜா** — *நீ யாருடன் பேசுகிருய் என்பதை அறிவாயா?*

**லவங்க** — *(வர்ணம் கூட்டிக்கொண்டே)* *அதை அறிந்துகொள்ள எனக்கு இச்சையும் இல்லை, சந்தர்ப்பமும் இல்லை.*

**ராஜா** — *இளைஞு! உன் உயிர் உனது நாவில் ஆடிக்கொண்டிருக்கிறது. ஜாக்கிரதையாகப் பேசு!*

**லவங்க** — நல்லது ; இன்னும் பேசவேண்டி இருக்கிறதா? ஒருகால் நீ என்னிடம் சஸ்திர சாஸ்திரம் கற்க விரும்புகிறாய் போலும்!

**ராஜா** — வராகம் உன் வழிக்கு வரவில்லை. நீ ஏன் அதன் மேல் அம்பெய்தாய்?

**லவங்க** — நீ யார் அதைக் கேட்பதற்கு?

**ராஜா** — நான் யாரா? இதற்குப் பதில் என் வாள் கொடுக்கும்.

**லவங்க** — ஏன்? உன் நாக்கு எங்கேயாவது புல் மேயப் போயிருக்கிறதா?

**ராஜா** — ஜாக்கிரதை! இந்த அவமானத்திற்காக நான் உன்னை யுத்தம் செய்யும்படி அறைகூவுகிறேன். யுத்தம் செய்யச் சித்தமாக இரு.

**லவங்க** — துவந்துவ யுத்தமா? பொறுத்துக் கொள். நான் இந்தச் சித்திரத்தைப் பூர்த்தி செய்து விடுகிறேன். அதுவரை நீ அந்த இறந்த வராகத்தைப் பார்த்துக்கொண்டிரு.

[ வர்ணக் கோலை எடுத்துச் சித்திரத்தின் பக்கம் திரும்புகிறாள் ]

**ராஜா** — யுவனே! என்னை எதிர்க்க, உனக்கு முதலில் சந்தர்ப்பம் கொடுக்கிறேன். முதலில் எனக்கு இடம் கொடுத்து ஏமாந்து போகாதே!

**லவங்க** — (சிரித்துக்கொண்டே) நான் உண்மையாகச் சொல்கிறேன்: இந்தச் சித்திரம் என்னால் எழுத முடியாவிட்டால் நான் உன்னுடன் பேசுகிறேன். எனக்கு என் வேலை முக்கியம். நீ பொறுத்தே இருக்க வேண்டும். தெரிகிறதா?

**ராஜா** — எல்லாம் நிற்கும். ஆனால் மரணம் நில்லாது. வார்த்தைகள் போதும். இப்பொழுது யுத்தந்தான் ஆகவேண்டும்.

**லவங்க** — ஓஹோ! ஒரு வராகத்தைக் கொல்ல முடியவில்லை. யுத்தம் செய்யப் புறப்பட்டுவிட்டாயோ?

[ *சித்திரத்தின் பக்கம் திரும்புகிறாள்* ]

**ராஜா** — நீ என்னை எதிர்க்காமல் இருக்கிறாய். இப்பொழுது நான் எதிர்ப்பதை ஏற்றுக்கொள்; ஜாக்கிரதை.

[ *ராஜா வாளை எடுத்துச் சித்திரத்தை அடிக்கிறான். அது உடைந்து கீழே விழுகிறது. லவங்கலதா ஜாக்கிரதையாய்ப் பக்கத்தில் வைத்திருந்த ஈட்டியை எடுத்துக்கொள்கிறாள். ஈட்டியுடன் ராஜாவின் பக்கம் திரும்பி எதிர்க்கிறாள். ஈட்டி நெருங்க நெருங்க ராஜா அதைத் தனது இடது கையால் பிடித்துக்கொள்கிறான். அதைப் பிடுங்கி எறிந்துவிடுகிறான். லவங்கலதா வாளை எடுக்கிறாள். ராஜா அதைத் தடுத்து அடிக்கிறான். வாள் ஒடிந்துவிடுகிறது. உடைந்த வாளை விட்டெறிந்து லவங்கலதா வில்லை எடுக்க விரும்புகிறாள். ராஜா அவளை இடது கையால் தடுத்துவிடுகிறான். அவள் இடறிக் கீழே விழுகிறாள். தலை ஒரு கல்லில் பட்டு ரத்தம் வருகிறது. அவளுடைய மார்பில் கத்தியை வைத்துக்கொண்டு ராஜா நிற்கிறான்.* ]

**ராஜா** — வீர வாலிபனே! நீ மன்னிப்புக் கேட்டுக்கொள். நான் உனக்கு உயிர்ப் பிச்சை அளிக்கிறேன்.

**லவங்க** — (*எழுந்திருக்க முயற்சி செய்துகொண்டே கஷ்டத்துடன்*) வாள் முனையில் மன்னிப்புக் கேட்பது, மன்னிப்பு அளிப்பது இரண்டுமே கோழைத்தனம்.

**ஆஹா ! நீ ஜயித்தாய் ! நான் தோற்றேன் ! ஆனாலும் மன்னிப்புக் கேட்க முடியாது. ஆஹா ! அம்மா......**

[ *கீழே விழுகிறாள். தலையிலிருந்த கிரீடம் கீழே நழுவுகிறது. நீண்ட கருங் கூந்தல் காற்றில் அசைய ஆரம்பிக்கிறது. ராஜா ஆச்சரியமடைந்தவனாய் வாளை எறிந்துவிட்டு மண்டியிட்டு உட்காருகிறான்.* ]

**ராஜா — அடாடா ! இது என்ன ஸ்திரீ போல் இருக்கிறதே !** (*மூக்கில் கை வைக்கிறான். மார்பில் கை வைக்கிறான். உடனே எடுக்கிறான்.*) **கடவுளே ! இது என்ன ?** (*ரத்தத்தைத் தடைசெய்யத் தன் மேல் வஸ்திரத்தைக் கிழித்துத் தலையில் கட்டுகிறான்.*) **நான் கண்ணிருந்தும் குருடன். தேன் போன்ற சொல், கொடி போன்ற தேகம், எத்தனை அடம், எவ்வளவு அலட்சியம் நிறைந்த சிரிப்பு ! இவ்வளவையும் பார்த்தும் கேட்டும் நான் அறிந்துகொள்ளாமல் போனேனே !**

[ *அவளை எடுத்துத் தோள்மேல் சார்த்திக்கொண்டு குதிரை ஏறிப் போகிறான்.* ]



## மூன்றாவது காட்சி

[காட்டு வழி. மந்தார் போர்வீரன் உடையில் உலவிக் கொண்டிருக்கிறான். அவனுடன் தேவதாருவும் இருக்கிறான். ஒரு சேனை வீரன் வருகிறான்.]

**சேனை வீரன்** — *ராஜ குமாரன் வாழ்க!*

**மந்தார்** — *என்ன விஷயம்?*

**சே. வீ** — *மஹாராஜாவின் கடிதம் வந்திருக்கிறது.*

**மந்தார்** — (கடிதத்தைப் பெற்றுக்கொண்டு) *மஹா ராஜா எங்கே இருக்கிறார்?*

**சே. வீ** — *விசாகா நதிக்கரையில், ஆனந்த மந்திரத்தில்.*

**தேவதாரு** — *ஆனந்த மந்திரத்திலா? விரோதியின் வீட்டிலா?*

**மந்தார்** — (கடிதத்தைப் படிக்கிறான்.) *'கடவுள் அருளால் யுத்தம் நின்றுவிட்டது. புஷ்பாவின் பிரஜை கள் நமது ஆட்சியை ஏற்றுக்கொண்டுவிட்டனர். நான் விநாயகனுடைய அதிதியாய் விசாகா நதிக்கரை யில் ஆனந்த மந்திரத்தில் இருக்கிறேன். கடிதம் கிடைத்தவுடன் என்னைச் சந்திக்க வேண்டும்.'*

**தேவதாரு** — *ஆச்சரியமாக இருக்கிறது!*

**மந்தார்** — *ஆச்சரியம் என்பது அஞ்ஞானத்தின் மறுபெயர்; அதை நான் இப்பொழுது அறிந்தேன். யார் அங்கே வீரன்?*

**சே. வீ** — *உத்தரவு!*

**மந்தார்** — *போ, சேனாதிபதியை அனுப்பு!*

**சே. வீ** — *உத்தரவு!*

[ *செல்கிறான்* ]

**மந்தார்** — *மிகவும் சந்தோஷப்படக்கூடிய விஷயம். யுத்தம் நடந்து தடைப்பட்டுவிட்டது. ஆனால் இது எப்படி ஆயிற்று?*

**தேவதாரு** — *அரசன் ரத்தக் களரிக்குப் பயந்து விரோதிகளின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டிருக்கலாம் என்று தெரிகிறது. இல்லாவிட்டால் ராஜி ஏற்பட்டிராது.*

**மந்தார்** — *ஆனது நல்லதாயிற்று. அண்ணா யோசித்து ஆராய்ந்தே ராஜி செய்திருக்கலாம். அபராஜிதாவுக்குக் கடிதம் எழுதலாம். அவள் சஞ்சலப் பட்டுக்கொண் டிருப்பாள். (ஒரு பூவைப் பறித்து மோந்து பார்க்கிறான்; பிறகு அதைக் கசக்கி எறிகிறான்.) அபராஜிதா.........அபராஜிதா........எப்படிப்பட்ட கவிதாபூர்வமான பெயர்! இன்பமான, ஸரஸமான...*

[ *சேனாதிபதி வருகிறான்* ]

**சேனா** — *ராஜ குமாரர் வாழ்க!*

**மந்தார்** — *சேனாபதி! பெரிய சந்தோஷ சமாசாரம். கலகம் அடங்கிவிட்டது. யுத்தம் நடக்கவில்லை. அரசர் நம்மை ஆனந்த மந்திரத்திற்கு அழைத்திருக்கிறார்.*

**சேனா** — *நான் எல்லாம் கேள்விப்பட்டேன். கூட ஒரு சுப சமாசாரமும் கேள்விப்பட்டேன்.*

**மந்தார்** — *என்ன?*

சேனு — புஷ்பாவின் ராஜ கன்னிகை விசால ஸாம் ராஜ்யமாகிய நந்தன நாட்டிற்கு ராணியாகலாம்.

தேவதாரு — என்ன சொன்னுய்?

சேனு — பகைத் தலைவன் வீட்டுப் பெண்ணிடம் மையல் கொண்டு அரசர் அவளை விவாகம் செய்து கொள்ள நிச்சயம் செய்திருக்கிறுர்.

மந்தார் — அது எப்படி நடக்கும்?

சேனு — உலகத்தில் நடப்பதைப் போல்தான்!

மந்தார் —ராஜகன்னிகையுடன் மஹாராஜாவுக்கு எப்பொழுது சந்திப்பு ஏற்பட்டது?

சேனு — அதுதான் ரகசியமாக இருக்கிறது. ஆனந்த மந்திரம் சென்றபின் தெரியலாம்.

மந்தார் — ஆனுல் யுத்தம் நின்றதற்குக் காரணம் இதுவாக இராதென்று எண்ணுகிறேன்.

சேனு —இருக்கலாம். என்னவோ?

தேவதாரு — ஆனந்த மந்திரத்தில் அரசனது ஆதி பத்தியத்தை ஏற்றுக்கொண்டதற்கும் இது காரண மாக இராதல்லவா?

சேனு — அப்படித்தான் தெரிகிறது.

மந்தார் — நந்தன நாட்டிற்கும் புஷ்பாவிற்கும் இம்மாதிரியான இன்பமான நட்பு ஏற்படுமென்று யார் அறிந்திருப்பார்கள்? வைரத்துடன் மரகதம் சேர்ந்தது. இரும்பு வாள்கள் புஷ்ப மாலைகளாயின. சேனுபதி! இந்தச் சுப சேதி சொன்னதற்காக உனக்கு என் நன்றி உரியதாகுக!

சேனு — ஆனுல், சேனைக்கு என்ன உத்தரவு?

**மந்தார்** — நாம் ஆனந்த மந்திரத்திலிருந்து திரும்பி வரும்வரை அங்கேயே இளைப்பாறிக் கொண்டிருக்கட்டும்.

**சேனு** — உத்தரவுப்படி.

[ அவன் செல்கிறான். ஒரு சேனுவீரன் வருகிறான் ]

**சே. வீ** — குமாரர் வாழ்க! ஓர் ஆச்சரியமான சமாசாரம்!

**மந்தார்** — என்ன ?

**சே. வீ** — இரண்டு மூன்று பெண்கள் ஒரு மரத் தடியில் விளையாடிக்கொண் டிருந்தனர். ஒருத்தி பூக் கொய்து கொண்டிருந்தாள். மற்றவள் நீர்வீழ்ச்சியி லிருந்து தண்ணீர் கொண்டு வந்துகொண்டிருந்தாள். மூன்றுமவள் சந்தனம் அரைத்துக்கொண்டிருந்தாள். பிறகு.........

**தேவதாரு** -- நடந்ததை ஏன் சொல்லவில்லை ?

**சே. வீ** — அதைத்தான் சொல்லிக்கொண்டிருக் கிறேன். இதற்குள் அவர்கள் பூஜை செய்துகொண் டிருந்த இந்தச் சித்திரம் என் கண்ணில் பட்டது. நான் திடுக்கிட்டேன். என் கண்களை நான் நம்ப வில்லை. பிறகு நான் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தேன். பிறகு.........

**தேவ** — என்ன, அது யமராஜனின் படமா என்ன ?

**சே. வீ** — இல்லை, இது ஸ்ரீமான்... அது இந்தச் சித்திரந்தான்!

[ ஒரு பெரிய படத்தை மந்தாரிடம் கொடுக்கிறான் ]

**மந்தார்** — அடே! என் படமல்லவா இது?

**சே. வீ** — ஆம், மஹாராஜ்!

**தேவ** — பார்க்கலாம்!

**மந்தார்** — இது உனக்கு எங்கே கிடைத்தது?

**சே. வீ** — மஹாராஜ்! இந்தச் சித்திரத்தைத்தான் அவள் பூஜை செய்துகொண்டிருந்தாள்.

**தேவ** — அசாத்தியம்! இந்தச் சித்திரம் எங்கிருந்து கொண்டுவந்தாய்?

**மந்தார்** —அசாத்தியம்! எப்பொழுது சாத்யமாகிறதோ அப்பொழுது ஆச்சரியங்கூட ஆகிறது. படைத்தலைவ! நீ அந்தப் பெண்களிடம் கேட்டாயா, இது எங்கிருந்து கிடைத்ததென்று?

**சே. வீ** — கேட்டேன்; பதில் சொல்லாமல் பயந்து ஓடிவிட்டனர்.

**மந்தார்** —நீ அவர்களை அழைத்துவர முடியுமா?

**சே. வீ** — சொல்ல முடியாது, மஹாராஜ்!

**மந்தார்** — நீ அவர்களைப் பிடித்துக்கொண்டு வா! வெகுமதி கொடுக்கிறேன்.

**சே. வீ** — உத்தரவுப்படி.

[ செல்கிறான். சிறிது நேரத்தில் திரும்பி வருகிறான் ]

**மந்தார்** — என்ன, தகவல் கிடைத்ததா?

**சே. வீ** — இல்லை. மஹாராஜ், நான் ஆள் அனுப்பியிருக்கிறேன். எங்கிருந்தாவது தகவல் கிடைக்கலாம்.

**மந்தார்** — நல்லது, போ! விவரம் தெரிந்தால் எனக்குத் தெரியப்படுத்து.

**சே. வீ** — உத்தரவு. (செல்கிறான்)

## நான்காவது காட்சி

[ ஆனந்த மந்திரத்தைச் சேர்ந்த உத்யானம். ஒரு வெள்ளைப் பளிங்குக் கல்லின் மேல் புஷ்பங்களைப் பரப்பி லவங்கலதா ஒருக்களித்துப் படுத்துக்கொண்டிருக்கிறாள். மாதவி அவளுக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டு அவள் கூந்தலைச் சரிபண்ணிக் கொண்டிருக்கிறாள். ]

**மாதவி** — லவங்கா! என்ன இன்று ஒருமாதிரி விசனமாய் இருக்கிறாய்? என் மேல் ஆணை: உண்மையைச் சொல்!

**லவ** — ஒன்றுமில்லையே!

**மாதவி** —என்னிடமே ஒளிக்கிறாயே! சொல்ல மாட்டாயா?

**லவ** — என்ன சொல்வேன்! ஏதாவது இருந்தால் தானே?

**மாதவி** — பின் ஏன் நீ இம்மாதிரி மௌனமாக இருக்கிறாய்?

**லவ** — ஏன்? இதோ பேசிக்கொண்டுதானே இருக்கிறேன்?

**மாதவி** — பேசுகிறாய்; ஆனால், வெறும் சுருதி மட்டும் கேட்கும் வீணை போல் இருக்கிறது. அதில் ஒன்றும் இனிய ஸ்வரங்கள் இல்லை, இசை இல்லை, இனிமை இல்லை - வெறும் சுருதி!

**லவ** — பின்னே எப்படிப் பேசுவது? நீதான் கொஞ்சம் சொல்லு.

**மாதவி** — நான் ஒன்று கேட்கட்டுமா?

**லவ** — கேளேன்!

**மாதவி** — உனக்கு ஏதாவது துக்கம் இருக்கிறதா?

**லவ** — (மௌனம்)

**மாதவி** — லவங்கா! நீ உன் உள்ளத்தை என்னிடங்கூட ஒளிப்பாயா? கொஞ்சங்கூட வெளியிட மாட்டாயா?

**லவ** — நான் உன்னிடம் எதை ஒளித்தேன்?

**மாதவி** — ஆமாம். இருக்கட்டும், போ! இதெல்லாம் மேல் வார்த்தைதான். நீ என்னை வேற்றாளாக நினைத்துவிட்டாய். உம்!

**லவ** — மாதவி, என்னை அறிந்துங்கூட அறியாதவள் போல் பாசாங்கு செய்கிறாயா?

**மாதவி** — அறிந்துகொள்ளத்தான் கேட்கிறேன்.

**லவ** — நானே அறியாத விஷயத்தை உனக்கு எப்படிச் சொல்ல முடியும்?

**மாதவி** — உன் விஷயம் உனக்குத் தெரியவில்லையா? இது ஒரு புதுமையாகத்தான் இருக்கிறது!

**லவ** — புதுமைதான். அதனால்தான் இன்னும் குழம்புகிறது.

**மாதவி** — நல்லது. நான் கேட்பதற்குப் பதில் சொல்வாயா?

**லவ** — (மௌனம்)

**மாதவி** — நீ அரசனை விரும்புகிறாயா, இல்லையா?

**லவ** — விரும்புவது என்பதன் அர்த்தம்?

**மாதவி** — உனக்கு அவரிடம் காதல் உண்டாகி....

**லவ** — காதல்......இதைக்கூட அறிய......

**மாதவி** — அவர் உன்னை அழகுள்ளவளாக மதிக்கிறார்.

**லவ** — புஷ்பத்தைக் காட்டிலும்!

**மாதவி** — அவர் வீரபுருஷர். உனக்கு அப்படித் தோன்றவில்லையா?

**லவ** — அவரைவிட வீர புருஷரை நான் கற்பனை கூடச் செய்ய முடியாது.

**மாதவி** — அவருடைய சோபை, அவருடைய உதாரத்வம், அவருடைய தயாளம், அவருடைய ஸௌபாக்யம் இவைகளை ஒப்புக்கொள்கிறாயா?

**லவ** — ஒப்புக்கொண்டேன்; அதனால்தான் அவைகளின் மேல் சிரத்தை வைத்திருக்கிறேன்.

**மாதவி** — உன்னிடந்தான் அவருக்கு எவ்வளவு அன்பு! ஏவ்வளவு அன்பு!

**லவ** — (வெட்கத்துடன்) உம்.........அப்புறம்?

**மாதவி** — நீ அவருடைய உள்ளத்தை அறிந்து அதற்குச் சாந்தி யளிப்பாய் என்று அவர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

**லவ** — இருக்கலாம்.

**மாதவி** — பின்னும் அவருடைய எண்ணம், உன் மனமும் அம்மாதிரியே இருக்கலாம் என்பதே.

**லவ** — இதையும் ஒப்புக்கொள்ள வேண்டியது தான்.

**மாதவி** — ஆனால், நீ அவரைக் காதலிக்கிறாயா? சொல்லு!

**லவ** — இதோ இந்தப் புஷ்பம் எவ்வளவு அழகாக இருக்கிறது! இந்தப் பரந்த நீல ஆகாயம் எப்

படி இருக்கிறது! இந்தப் பளிங்குக் கல் எவ்வளவு நிர்மலமாக இருக்கிறது! அதோ அந்த மரத்தில் ஒளிந்து உட்கார்ந்து பாடும் குயிலின் கீதம் எவ்வளவு மதுரமாக இருக்கிறது! நீ என்னிடம் எவ்வளவு அன்பாய் இருக்கிருய்! இந்தப் பெண் மானிடம் எத்தனை சஞ்சலம் நிறைந்த பார்வை! இந்தப் பசும் புல் தரை எவ்வளவு ரமணீயமாக இருக்கிறது! நான் இவைகள் யாவற்றினிடமும் காதல் கொள்கிறேன். எனக்கு எல்லாம் இன்ப மயமாகவே தோன்றுகின் றன. இதில் புதிதாக என்ன இருக்கிறது?

**மாதவி** — பசும் புல்லுக்கும், புஷ்பத்திற்கும், குயி லின் பாட்டுக்கும், ஒரு சுந்தர புருஷனுக்கும் எவ் வளவு வித்தியாசம் இருக்கிறது? இது உனக்குத் தெரியவில்லையா?

**லவ** — நான் அறியவில்லை. இதுதான் குழப்பம். ஆனுலும் அறிந்துகொள்ள முயற்சி செய்கிறேன்.

**மாதவி** — லவங்கா! புருஷனுக்காக ஸ்திரீ; அல் லது ஸ்திரீக்காகப் புருஷன். கேவலம், புஷ்பத்திற் கும் குயிலின் குரலுக்கும் அல்ல. இயற்கையின் சௌந்தரியத்தில் நமது மனம் குதூஹலமடையும், இன்பமடையும், ஆறுதலடையும், ஆனுல் காதல் ஏற்பட முடியாது. காதலின் ஆகர்ஷண சக்தி ஸ்திரீ புருஷரிடையேதான் உண்டாகும்.

**லவ** — அன்பின் ஆகர்ஷண சக்தி ஸ்திரீ புருஷ ரிடந்தான் ஏற்படுமா? உன்னிடமும் என்னிடமும் அந்த ஆகர்ஷண சக்தி இல்லையா?

**மாதவி** — எல்லா அன்பிற்கும் சக்தியுண்டு; ஆனால் எல்லா அன்பின் சக்தியும் காதலாகாது; அது வேறு. தாய் தன் குழந்தையிடம் அன்பு கொள்கிறாள்; குழந்தை மற்றொரு குழந்தையிடம் நட்புக்கொள்கிறது; இவை அன்பு, சிநேகம், நட்பு முதலியவை. ஆனால் காதல் அல்ல. காதல் ஸ்திரீ புருஷர் இருவரிடையே தோன்றும்.

**லவ** — (யோசித்துக்கொண்டே) காதல், ஸ்திரீ புருஷரிடையேதான் உண்டாகுமா? ஒருகால் நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால்......

**மாதவி** — ஆனால் என்ன?

**லவ** — ஆனால் ஸ்திரீ புருஷர் இருவர் ஆவதா லேயே காதல் ஆகிவிடுமா?

**மாதவி** — அப்படியல்ல, இருவரும் ஒருவரை யொருவர் நேசித்தால்தான்.

**லவ** — ஆனால்......நேசித்தால்......

**மாதவி** — ஆம், மனமொத்து ஒருவரை ஒருவர் நேசிப்பதுதான் காதல்.

**லவ** — இருக்கலாம். ஆனால் எனக்கு ஏன் ஏற் படவில்லை?

**மாதவி** — நீ அவரிடம் காதல் கொள்ளவில்லையா?

**லவ** — நானும் அதுதான் யோசிக்கிறேன். அது என்ன? அவர் சுந்தரர், வீரர், தயாளர், சிரேஷ்ட மானவர். ஆனாலுங் கூட...

**மாதவி** — ஆனாலும் என்ன?

**லவ** — என் மனத்திற்குத் தோன்றுகிறது: அவர் என்னுடையவரல்ல; குயிலைப் போல், புஷ்பத்தைப்

போல், அவர் மீதும் எனக்கு அன்பு இருக்கிறது. அந்த அன்பு காதலாகுமா?

**மாதவி** — ஸ்திரீ புருஷர் இருவரிடையே உள்ள அன்பு காதல் அல்லவென்றால், அது அசம்பவம்; உனக்கு மயக்கந்தான் ஏற்பட்டிருக்கிறது!

**லவ** — (யோசிக்கிறாள்)

[ விநாயக் வருகிறான் ]

**விநாயக்** — மாதவி! லவங்கா எப்படி இருக்கிறாள்?

**மாதவி** — நன்றாகத்தான் இருக்கிறாள்.

**லவ** — தாத்தா, அமராயிக்கு ஆள் அனுப்பினீர்களா?

**விநாயக்** — அனுப்பினேன். ஆனால் அந்தச் சித்திரம் கிடைக்கவில்லை. யாராவது எடுத்துச் சென்றிருக்கவேண்டும். இல்லாவிடில் காற்றில் பறந்து சென்றிருக்கும்.

**லவ** — எங்கும் அகப்படவில்லையா?

**விநாயக்** — ரொம்பத் தேடின பிறகுகூடக் கிடைக்கவில்லை. அதை மறந்துவிடு; வேறே ஒன்று செய்துகொள்ளலாம்.

**லவ** — வேறேயா? நல்லது, இப்பொழுது அதற்கு அவசியமே இல்லை.

**விநாயக்** — உம். நான் சொல்ல வந்ததை மறந்தேனே! இதோ பார், மாதவி! இன்று ராஜதானியிலிருந்து எல்லோரும் வரப்போகிறார்கள். ராஜகுமாரன் மந்தார்கூட வரப்போகிறான். சாயங்காலத்திற்குள் யாவரும் வந்துவிடுவர். ஒருகால் அவர்கள் லவங்காவைப் பார்க்க விரும்பலாம். அதன் பொறுப்பு உன்னைச் சேர்ந்தது.

**மாதவி** — *தாத்தா! நீங்கள் கவலையை விடுங்கள். எல்லாம் நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.*

**விநாயக்** — *குழந்தாய், லவங்கா! உனக்கு ஏதாவது தேவை இருந்தால் எனக்குச் சொல்லியனுப்பு. என்ன?*

**லவ** — *நல்லது, அப்படியே!*

**விநாயக்** — மேலும், இந்த விஷயத்தை நீ அறிவாயா? ஜனங்கள் எப்படி யாகிவிட்டார்கள்? ராஜதானி மக்கள் வெறுப்படைந்திருக்கின்றனர். என்ன நஷ்டம் செய்வார்களோ! நான் எதிர்பார்ப்பதெல்லாம் உன் கையில்தான் இருக்கிறது. நீ எல்லாம் அறிந்தவள். உனக்கு நான் என்ன சொல்லவேண்டும்?

**லவ** — தாத்தா! நான் என்ன செய்யவேண்டும்?

**விநாயக்** —இங்கே வா! என்ன செய்யவேண்டுமா? என்ன பைத்தியக்காரப் பெண்ணடி நீ! யாரும் சந்தோஷ மற்றவர்களாகக் கூடாது. இது மாத்திரம் உன் நினைவில் இருந்தால் போதும். என்னைவிட உனக்குத்தான் எல்லாம் தெரியுமே!

**லவ** — (யோசித்துக்கொண்டே) சந்தோஷ மற்றவளாய்......

**மாதவி**— *தாத்தா! நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். லவங்கா எல்லோரையும் சந்தோஷப்படுத்திவிடுவாள்.*

**விநாயக்** — மேலும் ராஜகுமாரன் மந்தார்கூட வருகிறான். அவனை விசேஷமாக வரவேற்கவேண்டும்.

**மாதவி** — *அப்படியே ஆகட்டும்.*

**விநாயக்** — நந்தன தேசத்தரசனின் அரண்மனை எல்லாம் நிறைந்திருந்தும் ஒரு ராஜலக்ஷ்மி இல்லாமல் சோபிக்கவில்லை. அந்தக் குறையை நமது லவங்கா பூர்த்தி செய்துவிட்டாள். இந்தச் சந்தோஷத்தினுல் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருக்கிறது. போதும். இவ்வளவுதான். மாதவி! நீ கவனம் வைத்துக்கொள்!

[ விநாயக் செல்கிருன் ]

**மாதவி**— என்ன யோசித்துக்கொண்டிருக்கிருய்?

**லவ** — என்னுடைய அந்தச் சித்திரம் காணுமற் போய்விட்டது. போகட்டும், நல்லதாயிற்று!

**மாதவி**— அது போனுல் வேறு செய்தால் போச்சு!

**லவ** — வேரு? உம்!

**மாதவி** — அதில் என்ன அப்பேர்ப்பட்ட விஷயம் இருக்கிறது? அப்படி ஒன்றும் அது அழகாகக்கூட இல்லையே?

**லவ** — மாதவி, நீ என்ன அறிவாய்? நான் என்னுடைய கனவுகளை உருக்கி ஒன்று சேர்த்தேன்; என்னுடைய உள்ளத்தில் கண் ஊன்றிக் கற்பனை செய்தேன்; உள்ளத்தினுடைய அந்தக் கற்பனையைச் சித்திரமாக மலரச் செய்தேன். உவையிலிருந்தும், வானவில்லிலிருந்தும், புஷ்பத்திலிருந்தும் அதற்கு வர்ணங்களை வாங்கினேன். இதயத்தின் பாஷையால் அவைகளை வெளிப்படுத்தினேன். என் ஆத்மாவில் நிறைந்திருக்கும் சௌந்தரியத்தைப் புருஷத்வத்தின் பரிபாஷையில் விரலால் தொட்டு வர்ண ரேகைகளாகச் செய்து திரட்டினேன். நான் சரீரம் செய்தேன் — பிராணனை அல்ல. உருவத்தை உண்

டாக்கினேன்—ஜீவனை உண்டாக்கவில்லை. நான் ரேகைகளால் செய்த இந்த உருவத்தைக் கடவுள் பஞ்ச பூதங்களால்கூடச் செய்ய முடியாது. உம்! உம்! அது காணமற் போய்விட்டது நல்லதாயிற்று.

**மாதவி** — நீயே அமராயி சென்று அதைத் தேடப் போவதாகச் சொன்னுயே ?

**லவ** — இல்லை, இல்லை! இப்பொழுது அதைக் கொண்டுவந்துதான் என்ன செய்யப் போகிறேன்? போனதே நல்லதாயிற்று!



## ஐந்தாவது காட்சி

[ *ஆனந்த மந்திரத்தின் உத்யான வனத்தின் மற்ருெரு பாகம். மஹாராஜா பாரிஜாதன் வருகிருன்* ]

**பாரிஜாதன்** — எப்பேர்ப்பட்ட சொப்பன தேசம்! வாழ்க்கையில் ஒரு கசப்பில்லை, சங்கோசமில்லை, பயமில்லை, வெறுப்பில்லை! இங்கே வாழ்க்கை ஸ்வர்க் கத்தின் அமர சங்கீதத்தைப் போல் பெருகுகிறது. இதில் மயக்கமில்லை; மகிழ்ச்சி இருக்கிறது. உலகத் தில் உள்ள எல்லாம் இங்கே புது உருக் கொண்டு பிரகாசிக்கின்றன. இவைகள் பழைய அர்த்தங்களை விட்டுப் புதிய அர்த்தங்களைக் கிரகித்துக்கொள்கின் றன. இவைகளின் எண்ணம் நூதனமாகிவிடுகிறது. உலகத்தின் இந்த உண்மை அழகு பெண் உருவாக வந்தது போல் தோன்றுகிறது. வெகுநாட்களுக்கு முன் குழந்தைப் பருவத்தில் பார்த்திருக்கலாம். அது இன்று புது யௌவனத்தின் ஆதிபத்தியத்தின்கீழ் எதிர்வந்து நிற்கிறது. அவள் அறிகிருள், ஆனல் பிரமையடைகிருள். பிறகு......

[ *மாதவி வருகிருள்* ]

**மாதவி** — தனியாக எதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

**ராஜா** — என் பாக்கியத்தைப்பற்றி!

**மாதவி** — வன கன்னிகையின் மேல் காதல் பூண் டதில் வருத்தம் ஏற்படுகிறதா?

**ராஜா** — இல்லை. இந்த வருத்தந்தான். நான் தனியாக இருக்கிறேன். வன கன்னிகைகள் பலர்

இருக்கிறார்கள். நான்கூடக் கிருஷ்ணனைப் போல் ஆயிரம் உருவம் எடுக்க முடியுமா?

**மாதவி** — லவங்கா வருகிறாள்; நான் செல்கிறேன்!

[ அவள் செல்கிறாள் ; லவங்கலதா வருகிறாள். ]

**ராஜா** — வா! மனம் நிம்மதியாய்த்தானே இருக்கிறது?

**லவ** — இப்பொழுது மாதவி இங்கே நின்று பேசிக்கொண்டிருந்தாளே, எங்கே சென்றுவிட்டாள்?

**ராஜா** — எங்கே? இதோ வருகிறேனென்றாளே!

**லவ** — ஆனால், நான்கூடப் போகிறேன்.

**ராஜா** — பொறு: அவள் இப்பொழுது வந்துவிடுவாள். இப்பொழுது மனம் எப்படி இருக்கிறது?

**லவ** — நன்றாகத்தான் இருக்கிறது.

**ராஜா**— முகம் வாடியிருக்கிறது. ஏதாவது வருத்தமா?

**லவ** — ஒன்றுமில்லையே!

**ராஜா** — இந்த வனதேவி ஸ்வரூபத்தில் உன்னைப் பார்ப்பவர்கள், உன் வாழ்நாளில் ஒருநாள்கூட ஆயுதத்தை எடுத்திருப்பாய் என்று சொல்ல முடியாது. வீரம் சௌந்தரியத்துடன் கலந்துவிட்டது. மின்னல் சந்திர கிரணமாக மாறிவிட்டது.

[ லவங்கலதா ஒருமுறை தலை நிமிர்ந்து பார்த்து மறுபடி கண்ணைத் திருப்பித் தலை குனிகிறாள். ]

**ராஜா** — தேவி!

**லவ** — மஹாராஜ்!

**ராஜா** — உலகம் என்னை மஹாராஜன் என்று சொல்லுகிறது. அதற்காக நீயும் சொல்லவேண்டுமா?

**லவ** — தாங்கள் எனக்கு மஹாராஜனைவிடச் சிரேஷ்டமானவர்கள். தாங்கள் என்னுடைய தேவதை!

**ராஜா** — லவங்கா! நான் தேவதையாக விரும்பவில்லை. நான் உன்னுடைய பூஜையை விரும்பவில்லை; உன் காதலைத்தான் விரும்புகிறேன். நான் உன்னைப் பூஜாரிணியாக மதிக்கவில்லை. என்னுடைய் வாழ்க்கைத் துணைவியாகவே மதிக்கிறேன். அப்படியே செய்ய விரும்புகிறேன். எனக்குக் கூறத் தகுந்த இன்சொற்கள் உன்னிடம் இல்லையா?

**லவ** — நான் யாரைத் தெய்வ பீடத்தில் வைத்தேனோ அவரை எனக்குச் சமமான இடத்திற்கு இறக்க இஷ்டமில்லை.

**ராஜா** — காதல் தண்ணீரைப் போல் ஒரே இடத்தை, சமமான இடத்தையே, தேடுகிறது.

**லவ** — இருக்கலாம்.

**ராஜா** — லவங்கா, ஒரு விஷயம்!

**லவ** — என்ன?

**ராஜா** — நீ என்மீது கோபிக்கமாட்டாயே?

**லவ** — கோபமா? அது அபசாரமல்லவா?

**ராஜா** — என் வார்த்தை உனக்குக் கஷ்டமாக இராதே?

**லவ** — கஷ்டமானால் ஆகட்டுமே! பிறகு அதை மாற்றி விடலாம்.

**ராஜா** — நீ என்னிடமிருந்து கொஞ்சம் விலகி இருப்பதாகத் தோன்றுகிறது.

**லவ** — (வெட்கத்துடன்) அது உங்கள் பிரமை!

**ராஜா** —இருக்கலாம். ஆனால் என் மனத்தில் என்னவோ உன்னுடைய சஞ்சலமற்ற சுதந்தர வாழ்க்கையில் நான் இடையூருகப் பிரவேசித்துப் பெரிய குற்றத்தைச் செய்துவிட்டது போலவும், உன் இன்பமயமான வாழ்க்கையின் இன்னிசையில் ஓர் அபஸ்வரத்தை உண்டாக்கியது போலவும் தோன்றுகிறது. உனக்கு நான் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதைவிட அதிகமாகவே நான் கவர்ந்துகொண்டேன். என் ஆத்மா என்னவோ ஒரு குளிரால் துடிக்கிறது. லவங்கா, என்ன? அது உண்மையாக இருக்குமா?

**லவ** — உண்மை என்றும் பொய் என்றும் தெரியாது. ஆனால் இது மாத்திரம் தெரியும்: தங்களுடைய ஸ்பரிசத்தால் நான் மிகவும் மேன்மை அடைந்திருக்கிறேன். என்னுடைய உலகம் கற்பனையானது. இப்பொழுது அதில் உண்மை வந்துவிட்டது. இந்த அற்ப காலத்திற்குள் நான் சிலவற்றைக் கற்றுக்கொண்டேன். ஆனால் அதிகமாக மறந்துவிட்டேன். நடப்பது நடந்தேவிடுகிறது. என்னுடைய கற்பனை உலகம் இடிந்து போவதற்காகவே கட்டப்பட்டது. அது தங்கள் ஸ்பரிசத்தால் இடிந்துபோயிற்று. இதற்காக நான் தங்களுக்கு எந்நாளும் கடமைப்பட்டவள். மாதவி வரவில்லையே! நான் போகட்டுமா?

**ராஜா** — பொறு. அவள் இப்பொழுது வந்துவிடுவாள். யார் அங்கே?

[ *தாதி வருகிருள்* ]

**தாதி** — மஹாராஜ்! ராஜகுமாரர் மந்தார் வந்திருக்கிருர்.

**ராஜா** — மந்தார் வந்துவிட்டானு?

**தாதி** — ஆம், இப்பொழுதுதான் வந்தார்.

**ராஜா** — எங்கே இருக்கிறுன்?

**தாதி** — பூந்தோட்டத்தின் வாயிலில்.

**ராஜா** — இங்கே அழைத்து வா! லவங்கா, மந்தார் வந்திருக்கிறுன்! உன்னைப் பார்த்து மிகவும் சந்தோஷமடைவான்.

[ தாதி வருகிறுள் ]

**லவ** — நான் போகட்டுமா?

**ராஜா** — இரு இரு. மந்தார் உன்னைப் பார்க்கத்தான் வருகிறுன்.

**லவ** — என்னை இங்கே பார்த்தால் அவர் என்ன நினைப்பார்?

**ராஜா** — (சிரித்து) நினைப்பதென்ன? வனத்தின் சௌந்தரிய தேவதை என்னைச் சந்திக்கப் புறப்பட்டதோ என்றுதான் நினைப்பான்.

**லவ** — எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை.

**ராஜா** — பார், அவன் வருகிறுன்!

**லவ** — என்னை விடுங்கள்!

**ராஜா** — பொறு. அவனிடம் என்ன வெட்கம்?

[ லவங்கா தலை குனிந்துகொள்கிறுள். மந்தார் வருகிறுன் ]

**ராஜா** — வா, மந்தார்!

[ மந்தார் தமையனை வணங்குகிறுன். ராஜா அவனைத் தழுவிக்கொள்கிறுன் ]

**ராஜா** — இதோ, உன்னுடைய மதனி!

[ மந்தார் லவங்கலதாவை வணங்குகிறுன். அகஸ்மாத்தாக இருவர் கண்களும் சந்திக்கின்றன ]

**லவ — (ஆச்சரியத்துடன்) ஆஹா, நீங்களா?**

[ *மந்தார் ஆச்சரியத்துடன் லவங்கலதாவின் பக்கம் பார்க்கிருன். ராஜா ஆச்சரியமடைகிருன்* ]

**லவ — என்னுடைய ஸ்வப்பன உலகத்தின்......**

[ *மூர்ச்சையடைந்து கீழே விழுகிருள். ராஜா அவளைத் தாங்கிக்கொள்கிருன். மந்தார் ஸ்தம்பித்து நிற்கிருன். மாதவி ஓடிவந்து லவங்கலதையைத் தன் மடியில் எடுத்து வைத்துக் கொள்கிருள்.* ]



## ஆருவது காட்சி

[ பூமாலை தொடுத்துக்கொண்டே அபராஜிதா வருகிருள். ஒரு தாதிப் பெண்ணும் வருகிருள். ]

**அபரா** — என்ன விசேஷம்?

**தாதி** — ராஜகுமாரர் மந்தாரிடமிருந்து கடிதத்துடன் ஒரு வீரன் வந்திருக்கிருன்.

**அபரா** — கடிதமா? எங்கே? (*தாதி கடிதத்தைக் கொடுக்கிருள்; கடிதத்தைப் படித்துவிட்டு*) வீரன் எங்கே? அவனை இங்கே அழைத்து வா!

[ தாதி செல்கிருள் ]

**அபரா** — (*கடிதத்தைப் படிக்கிருள்*) 'அபராஜிதா! உன்னிடம் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றவே இந்தக் கடிதம் அனுப்பியிருக்கிறேன். இன்றே என் வாழ்க்கையில் காதலென்பதை முதல் தடவையாக உணர்ந்தேன். இதுவே கடைசித் தரமுமாகும். உண்மையில் இது ஒரு கண்மூடித்தனம். நான் யாரைக் காதலித்தேனே அவளே என் தமையனின் வாழ்க்கைத் துணைவி யாகிவிட்டாள். இதன் முடிவு என்ன ஆகுமென்பதை அறிய முடியவில்லை. நீ என்னை மறந்துவிடு. — உன்னுடைய மந்தார்.'

[ வீரன் வருகிருன்; அபராஜிதாவை வணங்குகிருன் ]

**அபரா** — நீதான் இந்தக் கடிதம் கொண்டுவந்தாயா?

**வீரன்** — ஆம்.

**அபரா** — நீ புஷ்பாவிலிருந்தா வருகிருய்?

**வீரன்** — ஆம்.

**அபரா** —அங்கிருந்து எப்பொழுது புறப்பட்டாய்?

**வீரன்** — இன்று காலையில்.

**அபரா** — இங்கிருந்து எத்தனை நாழிகை தூரம் இருக்கிறது?

**வீரன்** — ஆறு நாழிகை தூரம்.

**அபரா** — விவாகம் எப்பொழுது நடந்தது?

**வீரன்** — இன்றுதான்.

**அபரா** — இன்று?

**வீரன்** — ஆம், விடியற்காலை மூன்றும் ஜாமத்தில்.

**அபரா** — ராஜகுமாரரும் அங்கிருந்தாரா?

**வீரன்** — ஆம்.

**அபரா** — நல்லது. பிறகு?

**வீரன்** — ராஜகுமாரரின் சித்திரம் ஒன்று வனத்தில் கிடைத்தது. அது யாருடையது, யார் எழுதினார்கள் என்ற தகவல் கிடைக்கவில்லை. ராஜகுமாரர் அதைத் தங்களுக்குப் பரிசாக அனுப்பியிருக்கிறார்.

**அபரா** — எங்கே பார்க்கலாம்? (சித்திரத்தைப் பார்த்து) ஆச்சரியம்! யாரோ எதிரில் உட்கார வைத்து எழுதியதைப் போலவே தோன்றுகிறது. யாரோ தேர்ந்த கலைஞனின் வேலை. ராஜகுமாரர்கூட இதைப் பார்த்து ஆச்சரியப்பட்டாரா?

**வீரன்** — ரொம்ப ரொம்ப வியந்தார். கடிதத்திற்குப் பதில் கிடைக்குமா?

**அபரா** — இல்லை, நானே வருகிறேன்!

**வீரன்** — தாங்களா?

**அபரா** — ஆம். நீ என்கூட வரலாம். (தாதியை நோக்கி) இவன் இளைப்பாற வேண்டிய ஏற்பாடு செய். [ தாதியுடன் வீரன் செல்கிறான் ]

## ஏழாவது காட்சி

*[ விசாகா நதிக்கரை. சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறுன். தூரத்தில் மங்கள வாத்தியத்தின் ஓசை கேட்கிறது. தேவதாரு ஒரு கல்லின் மேல் உட்கார்ந்திருக்கிறுன். மந்தார் ஒரு காலைக் கல்லின்மேல் வைத்துச் சந்திரனைப் பார்த்துக் கொண்டிருக்கிறுன். ]*

**மந்தார்** — இது என்ன! எங்கேயோ கேட்ட அந்தக் கீதம், மறந்துபோன அந்தக் கீதம், இப்பொழுதும் காதில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறதே! ஏதோ கனவு; அதனுடைய மங்கின சாயை இப்போது விழித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் வந்து சுற்றுகிறது. தெரிந்த ஒரு வியாகூலம்; தூக்கம் போன்ற ஒரு வேதனை; எதையோ இழந்துவிட்ட ஞாபகம்! இவைகளெல்லாம் என்ன?

**தேவதாரு** — குமார! இந்தப் பாவனைகளெல்லாம் வீண் பிரமைதான். ஏதோ ஸ்பஷ்டமில்லாத பிரத்தியக்ஷமில்லாத ஒரு கற்பனைக்கு ஜீவனளித்து அதன் பேரில் இவ்வளவு வியாகூலமும் துக்கமும் வேகமும் எதற்கு?

**மந்தார்** — இல்லை, இல்லை! தேவதாரு! வார்த்தைகளால் அளக்க முடியாத உண்மையினும் உண்மை அது. மறதியின் அந்தகாரத்தில் வெகுநாட்களுக்குப் பின் ஒரு பிரகாசம். ஆனுல் மீண்டும் பரிசயம் என்னும் கிரணம். மீண்டும் அதே மறதி; அதே ஞாபகம்; அதே ஏக்கம்; அதே அந்தகாரம்! எல்லாம் அதுவே! இது என்ன?

[ அபராஜிதா வருகிருள் ]

**அபரா** — மந்தார்! இதைத்தான் காதல் என்று சொல்வது!

**மந்தார்** — யார்? அபராஜிதாவா?

**அபரா** — ஆம்.

**மந்தார்** — நீ இங்கே......?

**அபரா** — ஆம். நான் இங்கே......

**மந்தார்** — நீ கொஞ்சம் விலகியிருக்கிருயா, தேவ தாரு?

[ தேவதாரு செல்கிருன் ]

**மந்தார்** — நீ எப்பொழுது வந்தாய்?

**அபரா** — இப்பொழுதுதான் வந்தேன்.

**மந்தார்** — எதற்காக வந்தாய்? எப்படி வந்தாய்?

**அபரா** — இவைகளெல்லாம் கேட்க மீண்டும் சமயம் கிடைக்கும்.

**மந்தார்** — அபராஜிதா, நீ வந்தது நல்லதாயிற்று. ஆனல் நீ ஏன் வந்தாய்? சொல்லு.

**அபரா** — நீ அழைத்தாய்; அதற்காக.

**மந்தார்** — நானு? நான் அழைக்கவில்லையே!

**அபரா** — அழைக்கத்தான் செய்தாய்! சப்தங்களால் அல்ல, உன் உள்ளத்தினுல்......

**மந்தார்** — அபராஜிதா! நீ இவ்வளவு அருகில் வந்திருக்கிரு யென்றும் என் ஹிருதயத்தைத் தொட்டுப் பார்த்திருக்கிரு யென்றும் நான் அறியவில்லை.

**அபரா** — இத்தனை தினங்களாக அறியாததை இன்று அறிந்து என்ன செய்யப்போகிருய்?

மந்தார் — உண்மையை அறிய காலம் அகாலம் என்று உண்டா ?

அபரா — அகாலந்தான் உண்மையைப் பொய் யாக்குகிறது. அதைத் தள்ளிவிடு. அதனுல் என்ன லாபம் ? நான் உன் காதலிக்கு என் கையால் சிங்கா ரம் செய்வதாகப் பிரதிக்ஞை செய்தேனே, அதை நிறைவேற்றவே வந்திருக்கிறேன்.

மந்தார் — என் காதலியா ! அபராஜிதா! இந்த வார்த்தையைக் கேட்பதாலேயே பாவம் ஏற்படு கிறது.

அபரா — நான் பாவம் புண்யம், தர்மம் அதர்மம் இவைகளைப்பற்றித் தெரியாதவள். புருஷன் எந்த ஸ்திரீயைக் காதலிக்கிருனே அவள் அவனுடைய காதலி என்ற விஷயம் மாத்திரம் தெரியும்.

மந்தார் — அபராஜிதா ! அவள் யார் தெரியுமா ? அதோ கேள் : விவாக மண்டபத்தில் மங்கள வாத்தி யம் முழங்குகிறதே ! இப்பொழுது அக்கினி சாக்ஷி யாக விவாகம் நடந்தேறியிருக்கும். நாளைத் தினம் சூரியோதயத்திற்குள் அவள் ராணியாவாள். நந்தன நாட்டின் ராணி ; என் தமையனின் மனைவியாகிய அவளை நீ என் காதலி என்று சொல்லலாமா ?

அபரா — நான் வார்த்தைகளுடன் சண்டை போடவில்லை. ஆனுல் இதை மாத்திரம் அறிவேன். உன்னுடைய இதயத்தில் எந்த உணர்ச்சி உண்டாகி யிருக்கிறதோ அதற்குத்தான் காதலென்று பெயர்.

மந்தார் — பொறு. அபராஜிதா ! காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே பயமாக இருக்கிறது.

ஒன்று கேட்கிறேன்: உண்மையைச் சொல்லு; காதல் புரிவது பாவமா?

**அபரா** — குமார! 'காதல்புரிவது பாவமா?' என்ற இந்தக் கேள்வியை ஒரு தினம் எனக்குள் நானே கேட்டுக்கொண்டேன். ஆனால் நான் எவ்வளவோ ஆராய்ந்தும் பதில் கிடைக்கவில்லை. கடைசியில் நீதான் எனக்குப் பதில் அளித்தாய்.

**மந்தார்** — நானா?

**அபரா** — ஆம். மந்தார், நீதான்! நீதான் முதன் முதலில், இந்தக் கேள்விக்கு அர்த்தமே இல்லை, இது தப்பு என்றாய்.

**மந்தார்** — நான் அறியவில்லை. நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

**அபரா** — 'காதல் செய்வது பாவமா?' என்று உலகம் கேட்கிறது. நான் அதனிடம், 'காதல் சிருஷ்டி பண்ணப்படுகிறதா? அதற்கு ஏதாவது கடமை இருக்கிறதா? சுதந்திரமாய் ஆழ்ந்து யோசித்துத் தராதரம் பார்த்து, எல்லாம் அறிந்தபின் காதல் ஏற்படுகிறதா? காதல் ஒரு வியாபாரமா?' என்றெல்லாம் கேட்கிறேன்.

**மந்தார்** — சொல்லிக்கொண்டே போ! நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**அபரா** — இங்கே இந்தக் கேள்வி தப்பாகிறது. காதல் புரிகிறோம், புரியவில்லை என்பது விஷயமல்ல. அது ஆகும்போது ஆகும். நிற்காது. அது நமது வசப்பட்ட விஷயமல்ல. அதற்கு எந்தக் கடமையும் கிடை

யாது கடமை இல்லாத விஷயத்தில் பாவம் தர்மம் என்ற கேள்வியே எழ நியாயமில்லை.

**மந்தார்**— சரியாகத்தான் சொல்லுகிறாய் !

**அபரா** — காதல் கொள்வது பாவம் என்று யார் சொல்லுகிறார்களோ அவர்களிடம் நீ இந்தக் கேள்வியைக் கேள்: ஜன்மம் எடுப்பது பாவமா? பிழைத்திருப்பது பாவமா? இறப்பது பாவமா? இவைகள் பாவமல்லவானால் காதல் புரிவது எப்படிப் பாவமாகும்? காதலென்பது மனத்தில் ஏற்படும் ஓர் உணர்ச்சி. அது பால, தருண, விருத்தர் முதலியவர்களைப் போன்று வளர்ந்து உருப் பெறுகிறது. சரீர மாறுபாட்டில், பால, தருண, விருத்தாவஸ்தைகள் ஆகிய மாறுபாடுகள் ஏற்படுவது போல மனத்தின் உணர்ச்சியிலும் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. அவைகளெல்லாம் பாவமல்ல எனின் இது மாத்திரம் எப்படிப் பாவமாகும்?

**மந்தார்** — அபராஜிதா! இதற்கு வேறொரு சிறப்புக்கூட இருக்கிறது.

**அபரா** — ஆம், நிச்சயமாக இருக்கிறது. காதலின் சம்பந்தம் ஒருபுறம் ஆத்மாவுடன்; மற்றொரு புறம் சமூகத்துடன். எதுவரைக்கும் இதற்கு ஆத்ம சம்பந்தம் இருக்கிறதோ அதுவரைக்கும் தர்மம், பாவம் என்ற கேள்வி எழுவதில்லை. காதல், வாழ்க்கை மலரும் நாடகத்தின் காட்சி. அது முக்தி மார்க்கத்தின் ஸாதனையில் முடிவு பெறுகிறது. ஆனால் மற்றொன்று: இந்தக் கபட சமூகத்திடம் அது கட்டுப்பட்டிருக்கிறது. அப்போது தர்மம் பாவம் ஆகியவற்றின் கதையும் ஆரம்பமாகிறது.

**மந்தார்** — அபராஜிதா! உன் வாயிலிருந்து நான் இந்த அபூர்வமான தத்துவங்களைக் கேட்டு ஆச்சரிய மடைகிறேன்.

**அபரா** —இது ஒரு சாதாரணமான விஷயம் என்பதை மறந்துவிட்டாய். இதயத்தில் காதல் உண்டாகும்போது யாரையும் கேட்டு உண்டாவதில்லை. அது வெள்ளத்தைப் போலப் பெருகுகிறது; அலைபோல் கொந்தளிக்கிறது. அப்பொழுது விவேகம் அதைத் தடை செய்ய முடிவதில்லை. சமூகத்தால் அதை நிறுத்த முடிவதில்லை. அதனுடைய அலைகளுக்கு அணைபோட முடிவதில்லை. காதல் வெள்ளம் வரும்போது நியமம், ஜாதி என்கிற மேடுகளின்மீது மோதி அடித்துக்கொண்டு கடைசியில் தன் லக்ஷிய மாகிய சாகரத்தில் கலக்கிறது. இது யுக யுகாந்தரத்தின் கதை; தெய்விகமானது; சிரஞ்சீவியானது. மந்தார்! ஒருவேளை இதை நீதான் எனக்குச் சொன்னாய் என்பது உனக்குத் தெரியாதிருக்கலாம்.

**மந்தார்** — நான் இதை உனக்குச் சொல்லவில்லை. அபராஜிதா! நான் யோசித்தேன்; நீ சொன்னாய். நான் இழந்தேன்; நீ பெற்றாய்.

**அபரா** — நான் அறிந்தேன். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் நீயும் இதை அடைவாயென்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்தத் தினமும் வந்து விட்டதாகத் தெரிகிறது.

**மந்தார்** — அபராஜிதா! நான் உன் உதவியை விரும்புகிறேன். எனக்குப் பலம் கொடு; தைரியம் கொடு; நம்பிக்கையைக் கொடு. இவை எல்லாவற்

றையும்விட வாழ்க்கையின் சிறிய தியாகம்; சாதா ரண ஸாதனையைச் செய்வதற்குரிய உணர்ச்சியை உண்டாக்கு.

அபரா — மந்தார்! நாம் இருவரும் ஒரு வழியில் பதிதர்கள்.

மந்தார் — மறுபடியும் நீ என்னை முந்திவிட்டாய். நீ என்னுடைய காதலியைச் சிங்காரிக்க வந்தாய். வா, புதுத் தம்பதிகளை ஒரு முறை பார்த்து நம் கண்களைப் பரிசுத்தமாக்கிக் கொள்வோம்!

அபரா — அவசியம் செய்கிறேன். நந்தன நாட்டின் புது ராணியிடம் அதிகமாகப் பேசவேண்டியிருக்கிறது. இருக்கட்டும். இந்தச் சித்திரம் உனக்கு எங்கிருந்து கிடைத்தது?

மந்தார் — எனக்கல்ல; ஒரு வீரனுக்குக் கிடைத்தது.

அபரா — எங்கே கிடைத்தது?

மந்தார் — வனத்தில்.

அபரா — அந்தச் சித்திரகாரன் யார்? உனக்குப் புலப்பட்டதா?

மந்தார் — ஒன்றும் புலப்படவில்லை.

அபரா — கண்டுபிடிக்க முயன்ருயா?

மந்தார் — முயன்றேன். தகவல் கிடைக்கவில்லை.

அபரா — இதனால் நீ ஆச்சரியமடைந்தாயா?

மந்தார் — உலகம் ஆச்சரியத்தில் நிறைந்திருக்கிறது. எவ்வளவு ஆச்சரியப்பட்டாலும், மறுபடியும் ஆச்சரியமே உண்டாகிறது.

[இருவரும் செல்கிருர்கள்]

## எட்டாவது காட்சி

[ *கலியாண ஆடைகள் அணிந்து லவங்கலதா வருகிறாள். ரத்னாபரணங்கள், கால் விரல்களில் நத்து பீலி முதலிய விவாக சின்னங்களுடன் அவள் விளங்குகிறாள். கூட மாதவியும் வருகிறாள். ஒரு தாதி பிரவேசிக்கிறாள்.* ]

**மாதவி** — என்ன சமாசாரம்?

**தாதி** — ஒரு பெண்மணி ராஜகுமாரியைச் சந்திக்க விரும்புகிறாள்.

**மாதவி** — யார் அவள்?

**தாதி** — கேட்டால்கூட அவள் தான் யார் என்று சொல்வதில்லை!

**மாதவி** — ஆனால் போகச் சொல். ராஜகுமாரியை இப்பொழுது சந்திக்க முடியாது.

**தாதி** — அவள் கேட்கமாட்டே னென்கிறாள்.

**மாதவி** — இப்பொழுது ராஜகுமாரி இளைப்பாறிக் கொண்டிருக்கிறாள். பிறகு வரச்சொல், போ!

[ *அபராஜிதா பிரவேசிக்கிறாள்* ]

**அபரா** —மஹாராணி லவங்கலதா! தங்களுடைய தாதிகளிடம் என்னைத் தடுக்கும் சக்தி கிடையாது. என்னுடைய இந்தத் துஷ்டத்தனத்தைப் பொறுக்க வேண்டும்.

**லவ** — தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?

**அபரா** — முதல் கேள்வி நான் யார் என்பது. நான் தங்களுக்குப் பதில் சொல்லுகிறேன். ஆனால் தனிமையில் சொல்லுகிறேன்.

[லவங்கா ஜாடை செய்கிருள். மாதவியும் தாதியும் செல்கின்றனர்]

**லவ** — இப்பொழுது தாங்கள் யாரென்பதை நான் அறியலாமா?

**அபரா** — நான் அஸாத்யமானவள் இல்லை. ஒன்றுமில்லாதவள். நான் மந்தாரின் சிநேகிதை என்பதை மாத்திரம் நீங்கள் சுருக்கமாய்த் தெரிந்துகொள்ளுங்கள்.

**லவ** — ராஜகுமாரரின் சிநேகிதையா?

**அபரா** — ராஜகுமாரரின் சிநேகிதையாவதில் ஆச்சரியப்படக்கூடிய விஷயம் என்ன?

**லவ** — இல்லை. ஒருகால் இதற்கு, தங்கள் இருவருடைய நட்பு சாதாரணமானது என்றுதான் அர்த்தமா? அலலது இல்லற....

**அபரா** — எங்கள் நட்பு நீங்கள் நினைப்பதைவிட அதிகமானது!

**லவ** — இதனுடைய அர்த்தம் என்ன?

**அபரா** — நான் அவரைக் காதலிக்கிறேன்!

**லவ** — தங்களுக்கு அவரிடம் காதல் ஏற்பட்டிருக்கிறது. அவர் உங்களுடைய — என்னுடைய துணிவுக்கு மன்னிக்க வேண்டும் — அவர் உங்களுடைய...

**அபரா** — ஒன்றுமில்லை. அவரே எனக்கு எல்லாம். ஆனால் நான் அவருக்கு வெறும் சிநேகிதைதான்.

**லவ** — தங்களைச் சந்தித்ததால் நான் சந்தோஷமடைகிறேன். தாங்கள் யாரென்று தெரிந்துகொள்ளலாமோ?

**அபரா** — என் பெயர் அபராஜிதா. உங்கள் வாயால் 'தாங்கள்' என்று கேட்பதைப் பார்க்கிலும் 'நீ' என்று கேட்டால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும். சகோதரி, நான் நந்தன மஹாராணியைச் சந்திக்க வரவில்லை; மந்தாரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஒருத்தியை, அவர் ஆத்மாவை, சந்திக்க வந்திருக்கிறேன்.

**லவ** — ஆனால் அவரா என்னைச் சந்திக்கும்படி உங்களை — உன்னை — அனுப்பினார்?

**அபரா** — இல்லை. அவர் அனுப்பவில்லை. நானே தான் வந்தேன்.

**லவ** — ராஜகுமாரர் உன்னிடம் ஏதாவது சொன்னாரா?

**அபரா** — என்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொன்னார்.

**லவ** —என்ன சொன்னார்?

**அபரா** — அவர் எதைச் சொன்னாரோ அதற்கு அர்த்தம் இதுதான்: அவர் சரஸ்வதியின் அருளால் ஊமையாகிவிட்டார். லக்ஷ்மியின் கிருபையால் அபாக்யவான் ஆகிவிட்டார். அவருடைய காதல் தேவதை அவரைப் பனிசூழ்ந்த கைலாச பர்வதத்தின் ஒற்றையடிப் பாதையில் நிற்க வைத்துவிட்டது.

**லவ** — இது எவ்வாறு ஆயிற்று?

**அபரா** — உன் ஆச்சரியத்தைப் பார்த்து எனக்கு ஆச்சரிய முண்டாகிறது. இதைக்கூடச் சொல்ல வேண்டுமா?

**லவ** — இதனுடைய பொருள் என்னவென்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**அபரா** — அபிப்பிராயத்தை மட்டும் சொல்லலாம். ஆனால் அதில் பொருள் கிடையாது. அவருடைய வழி எது? உனக்குத் தெரியுமா?

**லவ** — எதுவோ அது?

**அபரா** — இதற்குப் பதில் இப்பொழுது சொல்ல முடியாது. ஆனால் அவருடைய வழிக்கு முடிவு மாத்திரம் இல்லை என்பது தெரிகிறது: உலகத்தின் இக்கரையில் இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

**லவ** — நீ என்னைச் சந்திக்க வந்திருப்பது அவருக்குத் தெரியுமா?

**அபரா** — அவரிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன்.

**லவ** — அவர் அறிவாரா?...அ......அ......?

**அபரா** — ஏன் தடைப்படுகிறது?

**லவ** — அவருக்கு எல்லாம் தெரியுமா?

**அபரா** — அனுமானத்தால் எவ்வளவு தெரிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு தெரியும்.

**லவ** — அனுமானம்! அனுமானத்தால் உண்மையும் தெரிகிறது; சில சமயம் பிழையும் நேருகிறதே!

**அபரா** — அவருடைய மனப்பூர்வமான கோரிக்கை வெறும் அனுமானமாகவே இருக்கட்டும்; தப்பாகவே இருக்கட்டும்.

**லவ** — அப்படியா? ஏன் அப்படி?

**அபரா** — நெருப்பு எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ அவ்வளவு நல்லது.

**லவ** — ஆனல் அவருடைய அனுமானம் உண்மையே ஆகும். இதற்கு ஏதாவது அத்தாட்சி இருக்கிறதா அவரிடம்?

**அபரா** — வேறு பிரமாணம் இல்லாதபோது தான் அனுமானம் ஏற்படுகிறது. அன்றியும் பிரமாணத்தைவிட அதிக நம்பிக்கை அவர் இதயத்தில் இருக்கிறது.

**லவ** — அவருக்கு மனம் பிரமையடையவில்லை என்றும் உள்ளத்தின் உணர்ச்சியில் தப்பில்லை என்றும் தெரியுமா ?

**அபரா** — இதை நீ உன் மனசையே கேட்டுக் கொள்.

**லவ** — என் ஹிருதயத்தில் என்ன உணர்ச்சி இருக்கிறது? அது உனக்கு எப்படித் தெரிந்தது?

**அபரா** — எனக்கு எல்லாம் தெரியும். உதாரணமாக இதை அறிந்தேன்: உன் வாழ்நாளில் ஒரு முறைகூடப் பார்க்காமல் அவருடைய சித்திரத்தை எழுதினய். அது அவருடைய உண்மையான பிரதிபிம்பமாக இருக்கிறது.

**லவ** — அந்தச் சித்திரம்! உனக்கு அந்தச் சித்திரம் எங்கே கிடைத்தது?

**அபரா** — மந்தாரிடமிருந்து.

**லவ** — அவருக்கு அது எப்படிக் கிடைத்தது?

**அபரா** — வனத்தில் கிடந்தது.

**லவ** — அதை நானே எழுதினேனென்று அவர் அறிவாரா ?

**அபரா** — இல்லை. அவர் அறியவில்லை.

**லவ** — பின் நீ எப்படி அறிந்தாய் ?

**அபரா** — நானும் ஒரு ஸ்திரீ. ஆகையால் காதல் அந்தகாரத்தில் நான் வெகுதூரம் பார்க்க முடியும்.

**லவ** — அந்தச் சித்திரத்தைப் பார்த்து அவர் ஆச்சரியமடைந்தாரா ?

**அபரா** — ரொம்ப ! அவர் ரொம்ப விசாரித்தார். ஆனாலும் சித்திரகாரர் யாரென்று அவருக்குத் தெரியவில்லை.

**லவ** — அவர் அது சரியாக இருக்கிறது என்றாரா ?

**அபரா** — இது வேதனை தரும் வார்த்தை. என்னிடம் சொல்லாதே.

**லவ** — ஓஹோ !

**அபரா** — இன்று நான் உன்னை அலங்காரம் செய்ய வந்திருக்கிறேன்.

**லவ** — என்னையா ? அலங்காரம் செய்யவா ?

**அபரா** — ஆம். உன்னை ராஜலக்ஷ்மியைப் போல் — இல்லை — வனதேவியைப் போல் அலங்காரம் செய்ய. இன்றைய ஞாபகம் எனக்கும், ஒருகால் உனக்கும், வாழ்க்கை இருளில் யுக யுகாந்தரங்களில் ஆகாச தீபமாகப் பிரகாசிக்கும். இன்று நம் இருவருக்கும் மங்கல நாள்.

**லவ** — இதற்காக அலங்காரம் செய்யவேண்டிய அவசியம் என்ன ?

**அபரா** — பைத்தியமே ! சிங்காரந்தான் பெண்களின் ஜீவன். நான் என்னுடைய வெகு நாளைக் கோரிக்கையைப் பூர்த்திசெய்யப் போகிறேன். வா !

[ இருவரும் செல்கிறார்கள் ]

## ஒன்பதாவது காட்சி

*[ விசாகா நதிக்கரை. நதியில் நீர் அலைமோதிப் புரண்டோடுகிறது. மந்தாரும் ராஜா பாரிஜாதனும் வருகிறார்கள். அவர்களுடன் தேவதாருவும் வருகிறான். ]*

**பாரிஜாதன்** — மந்தார்! நீ இம்மாதிரி எங்களை விட்டுப் போவாய் என்கிற எண்ணம் எங்களுக்கு இல்லை. பிறந்தது முதல் இன்றுவரை நீ என்னைப் பிரிந்து சென்றதில்லை. இன்று ஒரேயடியாக இவ்வளவு தூரம் செல்லப் போகிறாய். இதை நினைக்கும் போது என் மனம் நடுங்குகிறது.

**மந்தார்** — வீடு வாசல், பந்துக்கள் எல்லாம் மனித வாழ்க்கைக்கு உகந்த அழகுகள். ஆனால் இந்தப் பந்தங்களை உதறித் தள்ளிச் சென்றால் மனித சமூகத்திற்கு நன்மை செய்யலாம். மனிதத் தன்மை அன்பில் ஆரம்பமாகிறது. சேவையில் ஈடுபடுகிறது. அண்ணா! நான் மனித சமூகத்திற்குச் சேவை செய்ய என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள்!

**பாரி** — மந்தார்! நான் உன் ஹ்ருதயத்தையும் உன் புத்தியையும் அறிவேன். நீ எதைச் செய்ய வேண்டுமோ அதைத் திறம்படச் செய்ய முடியும். ஆனால்...நான் என் இதயத்தில் உள்ளதை எப்படிச் சொல்லுவேன்? எப்படி இதற்குச் சம்மதிப்பேன்?

**மந்தார்** — தாங்கள் என்மேல் வைத்த அன்பைக் கொஞ்சம் மனித சமூகத்தின்மேல் சிதற விடுங்கள். பிறகு தங்கள் மனத்திலும் என் போன்ற உணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

**பாரி** — சகோதர ! நான் கவியுமல்ல, தீர்க்க தரிசியுமல்ல. வாழ்க்கையில் எப்பொழுது அத்தகைய உணர்ச்சி உண்டாகுமோ? உண்டாகுமென்ற நம் பிக்கையும் இல்லை. என்னைப் பொறுத்தமட்டில் நீ நீதான், உலகம் உலகந்தான். நீ செல்கிறாய். ஆனால் நீ எனக்குக் குறிப்பிட்ட சமயத்தில் செய்தி அனுப் பிக்கொண்டிராவிட்டால் நானும் உன் வழியைப் பின் பற்றுவேன் !

**மந்தார்** —அம்மாதிரியான சந்தர்ப்பம் வராது. ஏற்பாட்டின்படி குறிப்பிட்ட தருணத்தில் செய்தி அனுப்புகிறேன்.

**பாரி** — மந்தார் ! போகத்தான் போகிறாயா ?

**மந்தார்** — நான் போய்க்கொண்டே இருக்கிறேன். ஏனென்றால் நான் போகவே விரும்புகிறேன், சென்று தீரவேண்டும். அண்ணா ! எனக்கு இந்தச் சமயம் தைரியம் சக்தி ஒன்றும் அவசியமில்லை. தங்க ளுடைய நலனே என் அந்தகாரத்தின் வான விளக் காக இருக்கும்.

**பாரி** — மந்தார், ஆனால் எனக்கு நம்பிக்கை இருக் கிறது. மக்களின் சேவைக்காக ஒரு சோகமான வாழ்க்கையை விட்டுச் செல்கிறாய். ஆனால்...மறுபடி யும் என் மந்தார், எல்லோரையும் விட்டு அந்தக் கண் ணுக்கெட்டாத தூரத்திற்குச் செல்கிறாயே ......... ஒருகால் எப்பொழுதும் ...... மந்தார் ! ......

[ கண்ணீர் ததும்ப அழுகிறான். புஷ்பங்கள் அணிந்து லவங்கலதாவும் அபராஜிதாவும் வருகிறார்கள் ]

**அபரா** — இவ்வளவு சீக்கிரமா? மந்தார், செல்கிருயா?

**மந்தார்** — ஆம்.

**அபரா** — உண்மையாய்ச் செல்கிருயா?

**மந்தார்** —மறுபடியும் ஒருதரம் இந்தக் கேள்வியைக் கேட்கிருயா, அபராஜிதா?

**அபரா** —அன்று பிரிந்துவிட்டாய்!

**மந்தார்** — இன்றும் அப்படியே செல்வேன்.

**அபரா** — எங்கே?

**மந்தார்** — உலகத்தின அக்கரைக்கு.

**அபரா** —ஆனுல், நான் எங்கே இருப்பேன்?

**மந்தார்** —உனக்கு வேண்டிய இடம் இருக்கிறது. உனக்கு உலக பந்தம் என் போன்ற அவ்வளவு கொடுமை உள்ளதாக இல்லை.

**அபரா** — அறிந்தேன், மந்தார்! ஆனுல் நான் உன்னை எதிர்பார்ப்பேன்.

**மந்தார்** — எதுவரை என் ஸாதனை பூர்த்தியடையவில்லையோ அதுவரை நான் எப்படி வரமுடியும்?

**அபரா** — உன் ஸாதனை பூர்த்தியாகட்டும். உன் தவம் ஸித்தியடையட்டும். நான் யுக யுகங்களுக்கும் ஜன்ம ஜன்மாந்தரங்களுக்கும் உன்னை எதிர்பார்ப்பேன்.

**மந்தார்** — இப்பொழுது விடைபெற்றுக்கொள்கிறேன்.

[ ராஜனை வணங்குகிருன். ராஜா அவனை மார்புடன் தழுவுகிருன். பிறகு லவங்கலதாவை வணங்குகிருன். லவங்கலதா எழுந்திருக்கிருள் ]

**மந்தார்** — (*லவங்கலதாவிடம்*) விடைகொடுங்கள்.

**லவ** — உன் ஸாதனை பூர்த்தியாகட்டும், கடவுள் உம்மை...உம்மை...உங்களுக்குச் சுகமளிக்கட்டும்!

**மந்தார்** — அபராஜிதா!

**அபரா** — நாம் சந்திப்போம். அங்கே சந்திப் போம். உலகத்தின் அந்தக் கரையில் — அடிவானத் துக்கு அப்பால் — சந்திப்போம்!

[ *மந்தார் எல்லோரையும் வணங்கிப் படகில் ஏறிக்கொள் கிறான். அவனுடன் தேவதாருவும் இருக்கிறான். படகு செல்கிறது.* ]



# நவயுகப் புஸ்தகங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. புதுமைப்பித்தன் கதைகள் (பரிசுப் பதிப்பு) | 2 | 12 |
| ஷை (கலிகா-ராப்பர்) | 2 | 0 |
| 2. பெண் | 1 | 12 |
| 3. கிரஹதாகம் I | 1 | 12 |
| ஷை (பாகம் II) | 1 | 12 |
| 4. சுகம் எங்கே? | 1 | 12 |
| 5. அன்னு | 1 | 12 |
| 6. ரஜபுத்திர ஆதிக்கத்தின் அஸ்தமனம் | 1 | 12 |
| 7. மகாராஷ்டிர ஜீவன் உதயம் | 1 | 12 |
| * 8. கம்பன் கவிதை | 1 | 8 |
| 9. கட்டபொம்மு | 1 | 8 |
| 10. வின்ஸ்டன் சர்ச்சில் | 1 | 8 |
| 11. பேஸிஸ்ட் ஜடாமுனி | 1 | 8 |
| 12. நடைச் சித்திரம் | 1 | 8 |
| 13. மழையும் புயலும் | 1 | 8 |
| 14. மேனாட்டு ஞான மலர்கள் | 1 | 8 |
| 15. தேவதாஸ் | 1 | 0 |
| 16. உலகத்துச் சிறு கதைகள் | 1 | 0 |
| 17. பாகிஸ்தான் | 1 | 0 |
| 18. வெற்றி யாருக்கு? | 0 | 12 |
| 19. ஆங்கிலக் கவிதை மலர்கள் | 1 | 0 |
| ஷை ரெக்ஸைன் பதிப்பு | 1 | 8 |
| 20. கோயரிங் | 0 | 12 |
| *21. மாகாண சுயாட்சி | 0 | 8 |
| 22. தேய்ந்த கனவு | 0 | 8 |
| *23. சீனா-ஜப்பான் | 0 | 8 |
| *24. மைக்கேல் காலின்ஸ் | 0 | 8 |
| 25. எல்லோரும் ஓர் குலம் | 0 | 8 |
| 26. வார்தா திட்டம் | 0 | 8 |
| *27. இரட்டை மனிதன் | 0 | 8 |
| 28. பொம்மையா மனைவியா? | 0 | 8 |
| *29. கப்சிப் தர்பார் | 0 | 8 |
| 30. லெனின் | 0 | 8 |
| 31. ஸப்த நதிகள் | 0 | 8 |
| 32. மேஹர் உன்னிஸா | 0 | 8 |
| 33. திரிபுரி காங்கிரஸ் | 0 | 6 |
| 34. அடிவானத்துக்கு அப்பால் | 0 | 6 |
| 35. நாம் எங்கிருக்கிறோம்? | 0 | 4 |
| 36. மதனி | 0 | 4 |
| 37. ஆறு கதைகள் | 0 | 4 |
| 38. விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை | 0 | 4 |
| 39. தளபதி டிகால் | 0 | 4 |
| 40. சைவ உணவு எது? | 0 | 4 |
| 41. அடிமைத் தாய் | 0 | 3 |
| 42. பக்த குசேலா | 0 | 3 |
| 43. நாசகாரக் கும்பல் | 0 | 3 |
| 44. வ. ரா. சரிதம் | 0 | 2 |
| 45. மந்தரை சூழ்ச்சி | 0 | 2 |
| 46. ஆர்க்கிமிடீஸ் | 0 | 2 |
| 47. சுகாதாரச் சட்ட விளக்கம் | 0 | 1 |

* இக்குறியிட்ட புஸ்தகங்கள் செலவாகிவிட்டன.

நவயுகப் பிரசுராலயம் லிமிடெட், ஜி. டி., சென்னை.

தமிழ் நாடெங்கும் புகழ்பெற்று வரும்

# நவயுகப் பிரசுராலயத்தின்

## புதிய புஸ்தகங்கள்

3997

- திருச்சி ஜெயில்
- ஸ்டாலின்
- வினோபா பாவேயும் அவர் சிந்தனைகளும்
- அமெரிக்காவின் அறைகூவல்
- இந்தியாவும் பொதுநல சமுதாயமும்
- தற்காலத் தமிழ் இலக்கியம்
- அற்புத உலகம்
- ஆங்கிலக் கவிதை மலர்கள்
- அவன் அமரன்
- அடிவானத்துக்கு அப்பால்

## இனிய நாவல்கள்

- மாதவி
- மகாராஷ்டிர ஜீவன் உதயம்
- ரஜபுத்ர ஆதிக்கத்தின் அஸ்தமனம்
- சுகம் எங்கே ?
- அன்னு
- கிரஹதாகம் (இரண்டு பாகங்கள்)
- பெண்
- மேஹர் உன்னிஸா